

DIWAN BAHADUR

# AGATHUR MUTHURAMASWAMI KALINGARAYAR AVERGAL

## POLIGAR OF UTTUKULI

24.01.1864 - 1931



# அகத்தூர் அம்மன்

# நுழைவாயில்

முனைவர் அமுதன்

ஒரு சாதாரண மனிதர், சாதனை புரிந்தபோது சரித்திர நாயகர் ஆகிறார். "செயற்கரிய செய்வார் பெரியார்" என்பது தமிழ்மறை.

வெள்ளோடை சாத்தந்தை குலத்து, நஞ்சைய கவுண்டர், பாப்பாயி என்ற ஒரு சாதாரண குடும்பத்துத் தம்பதியர் மகன் இலிங்கையன் கொங்கு நாட்டுச் சரித்திரத்தில் தனியிடம் பிடித்த சாகச வரலாறு, கற்பவரையெல்லாம் வியக்க வைக்கும் வீரவரலாறு; ஈர வரலாறு.

தாய்மாமன் சின்னப்பகவுண்டரின் மகள் தனம்மாவைப் பெண் கேட்டபோது அவர் உரைத்த அவமான வாசகங்கள் கொங்குமக்களின் மானவாசகங்கள், மனவாசகங்களா மாற்றிக் காட்டிய மகா புருஷர் காலிங்கராயர்.

கலிங்கம் என்பது அணையென்று பொருள்படும் ஒரு தமிழ்ச்சொல்லாகும். கல்லால் கட்டப்பட்டு நீரைத்தேக்கி வைப்பது கலிங்கம். அந்த சாகசத்தைச் செய்து முடித்த லிங்கையன், கலிங்க லிங்கையன் ஆகி காலிங்கராயர் ஆன வரலாறு சுவைமிக்கது.

இப்பட்டம் இவரால் கேட்டு வாங்கப்படவில்லை. பாண்டிய மன்னன் வீரபாண்டியன் மாறவர்மன் சுந்தரபாண்டியனால் "காளிங்கராயன்" என்னும் பட்டம் கூப்பிட்டுக் கொடுக்கப்பட்டது.

அவர் காலத்தில் காவிரி, பள்ளத்தில் ஓடி, கொங்குநாட்டுக்குப் பயன்படாத நதியாக இருந்தது.

அது நமக்கு, பயன்படும் நதியாக இல்லாமல், பார்வை நதியாகவே இருந்தது.

அன்று கொங்கு மக்கள் மாடுபோல உழைத்தார்கள். ஆனால் மனிதர்களாக வாழ்ந்தார்கள்.

இவர்களுக்கு ஏதாவது செய்தாகவேண்டும் என்று லிங்கையன் துடித்துக் கொண்டிருந்த துடிப்புக்கு, தாய்மாமன் சொன்ன ஏளனம் உரமாக அமைந்தது.

பவானி அணை தொடங்கி கொடுமுடி ஆவுடையார் பாறை வரை, 56½ மைல் வாய்க்கால் வெட்டி, பூந்துறை நாட்டை பொன் உறை நாடாக்கிய புகழ்கோமான் காலிங்கராயர்.

அவர் நிலத்தில் பதித்த நீர் வழி அல்ல அது. கொங்கு மக்கள் நெஞ்சில் பதித்த வாழ்நெறி அது.

100 மைல் நிலப்பகுதிக்கு அது ஒரு தண்ணீர் ஊர்வலம்!

ஒரு பச்சைக் குதூகலம்! நதிமகளை "என் பின் வா" என்று நடந்துவரச் செய்த நன்மகன் காலிங்கராயர்.

செல்லும் வழியெல்லாம் நெல்லும் கரும்பும் செழித்துக் கிடக்கச் செய்த வல்லமைக் கோமான் காளிங்கராயர்.

ஒருவருக்கு, ஒரு குடும்பத்துக்கு ஓர் ஊருக்கு, ஒருகாலத்தில் கொடை கொடுத்த வள்ளல்கள் உண்டு.

ஆனால் காளிங்கராயர் என்னும் இக்கருணைக் கோமான் கொடுத்த கொடையோ ஆயிரமாயிரம் குடும்பங்களுக்கு ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு அழியாத பேருதவி!

குலையாத பெருங்கொடை. பவானி நதியையும், நொய்யல் நதியையும் இணைத்து நதிநீர் இணைப்புக்கு நல் வழிகாட்டியாய் முதல்வழி காட்டிய நல்லோர் காளிங்கராயர்.

கொடுத்ததை வாங்கக் கூடாது என்று "பூந்துறை நாட்டுக்கு

என் கொடை இது" என்று சேற்றுக்குழியாம் ஊற்றுக்குழியில், தன் மாட்டுக்குழுவுடன் வந்தமர்ந்த மாவீரன் காலிங்கராயர்!.

அந்த மாவீரர் வரலாற்றை இந்த மண் மறக்கக்கூடாது என்ற நினைவினால் இந்த நூல் எழுகிறது!. காலிங்கராயரின் கண்ணியமாம் மரபுதித்த செந்தில்குமார் காளிங்கராயர் திருமதி. சாந்தா காளிங்கராயர் திருவயிறு வாய்த்த Dr. ஸ்ரீராம் காளிங்கராயர் நல்ல மணநாளில் நல் மனங்கள் வாழ்த்துரைக்க கொங்கின் புகழும், அதில் காளிங்கராயர் எனும் மங்காக் குடிப்புகழும் நெஞ்சில் மறவாது நிறுத்த வந்த சுவடி இது!.

# கொங்குமண்டலம் நாட்டுப்பிரிவுகள்

புலவர் **தே.ப. சின்னசாமி**

கொங்கு நாட்டு சோழர் ஆட்சியில் கொங்கு மண்டலம் என வழங்கப்படடது. பிற்காலச் சோழர்கள் தங்கள் நாட்டை ஏழு மண்டலங்களாகப் பிரித்தனர். கொங்கு நாட்டை அதிராச மண்டலம் என்று பெயரிட்டனர். கொங்காள்வான் ஆண்டான். 13ம் நூற்றாண்டில் விஜயநகரப் பேரரசு தோன்றியது. உரையாசிரியர் காலம் என்பர். கார்மேகக் கோனார் கொங்கு மண்டலச் சதகத்தை எழுதினார். கெங்குநாட்டுப் பிரிவுகளையும், ஊர்த் தொகையையும் இதில் விரிவாகக் கூறினார். 7ம் நூற்றாண்டிலேயே இப்பிரிவு இருந்தது. 13ஆம் நூற்றாண்டில் விஜய நகரப் பேரரசு கொங்கு நாட்டை 24 நாடுகளாகப் பிரித்தாண்டது. நாயக்கமன்னர்கள் பிரதிநிதிகளாக இருந்து ஆண்டனர். ஊர்த்தலைவர்கள் பெயரால் ஊர்கள் அமைந்தன. தற்கால அமைப்புப்படி கோவை, சேலம், கரூர், நாமக்கல், பல்லடம், பழனி, தாராபுரம், தர்மபுரி ஆகியன கொங்கு நாட்டில் அடங்கி இருந்தன.

## கொங்கு 24 நாடுகள் :

1. பூந்துறை நாடு - ஈரோடு, திருச்செங்கோடு வட்டங்கள்.
2. தென்கரை நாடு - தாராபுரம், கரூர் வட்டப்பகுதிகள்.
3. காங்கேய நாடு - தாராபுரம், காங்கேயம் பகுதிகள்.
4. பொங்கலூர் நாடு - பல்லடம், தாராபுரம் வட்டப்பகுதிகள்.
5. ஆறை நாடு - கோவை, அவினாசி வட்டப்பகுதிகள்.
6. வாரக்கா நாடு - பல்லடம், பொள்ளாச்சி வட்டப்பகுதிகள்.
7. திருஆவின் நன்குடி நாடு - பழனி, உடுமலை வட்டப்பகுதிகள்.
8. மணநாடு - கரூர் வட்டம் தென்மேற்குப் பகுதி
9. தலையூர் நாடு - கரூரின், தெற்கு, மேற்குப் பகுதிகள்.
10. தட்டையூர் நாடு - குளித்தலை வட்டம்.
11. பூவாணிய நாடு - ஓமலூர், தர்மபுரி வட்டப்பகுதிகள்.
12. அரைய நாடு - ஈரோடு, நாமக்கல் பகுதிகள்.
13. ஒடுவங்கநாடு - கோபி வட்டம்
14. வடகரைநாடு - பவானி வட்டம்
15. கிழங்கு நாடு - கரூர், குளித்தலை வட்டம்
16. நல்லுருக்காநாடு - உடுமலைப்பேட்டை
17. வாழவந்தி நாடு - நாமக்கல் வட பாகம், கரூர்
18. அண்ட நாடு - பழனி வட்டம், தென்கீழ்ப்பகுதி
19. வெங்கால நாடு - கரூர் வட்டம், கிழக்குப்பகுதி
20. காவழக்கால நாடு - பொள்ளாச்சி வட்டம்
21. ஆனைமலை நாடு - பொள்ளாச்சி தென்மேற்கு
22. இராசிபுர நாடு - சேலம், ராசிபுரம், கொல்லிமலை
23. காஞ்சிக்கோயில் நாடு- கோபி, பவானிப்பகுதி
24. குறும்பு நாடு - ஈரோடுப்பகுதி

## மலைகளும் கோட்டைகளும் :

1. அவிநாசி - ஓதியமலை, குருந்தமலை
2. கோவை - சிரவணம்பட் ாலமலை, பெருமாள்மலை
3. பொள்ளாச்சி - ஆனைமலை, பொன்மலை

4. உடுமலைப்பேட்டை - திருமூர்த்தி மலை
5. பல்லடம் - தென்சேரிமலை, அழகுமலை, குமாரமலை
6. தாராபுரம் - ஊதியூர்மலை, சிவன் மலை
7. ஈரோடு - சென்னி மலை, பெருமாள் மலை
8. கோபி - தவளகிரி, குன்றத்தூர்
9. பவானி - பாலமலை, ஊராட்சிக் கோட்டை மலை
10. கொள்ளேகால் - மாதேசுவரன் மலை
11. திருச்செங்கோடு - சங்ககிரி, மோரூர் மலை, திருச்செங்கோடு
12. இராசிபுரம் - கொங்கணமலை, கொல்லிமலை
13. சேலம் - சேர்வராயன் மலை, ஏர்க்காடு, கந்தகிரி
14. நாமக்கல் - கொல்லிமலை, கபிலர் மலை, நைனாமலை
15. கரூர் - தான்தோன்றிமலை, வெண்ணெய் மலை, புகழிமலை
16. பழனி - ஐவர் மலை, பழனிமலை, கொண்டல் தங்கி மலை.

கொங்கு நாட்டின் 51 கோட்டைகள் உள்ளன. கோயம்புத்தூர், சத்தியமங்கலம், கொள்ளேகால், கொடுவேரி, தணாய்க்கன், பொள்ளாச்சி, ஆனைமலை, திண்டுக்கல், தாராபுரம், பொன்னாபுரம், பெருந்துறை, எழுமாத்தூர், ஈரோடு காங்கேயம், கரூர், வினாயகமங்கலம், அரவக்குறிச்சி, பரமத்தி, பவானி, மோகனூர், நெருஞ்சிப் பேட்டை, மேட்டூர், சரம்பள்ளி, காவேரிபுரம், சேலம், தகடூர், ராயக்கோட்டை அதமன் கோட்டை, ஓமலூர், காவேரிப்பட்டணம், தேகனிக்கோட்டை, பெண்ணகரம், பெரும்பாலை, சோழப்பாவு, தொப்பூர், அரூர், தென்கரைக் கோட்டை, ஆத்தூர், கொங்கு நாடு மழை நலங் கெட்டு அவ்வப்போது வறட்சியாலும்,

சேந்தமங்கலம், நாமக்கல், 300 அடி, சங்ககிரி - 1500 அடி, தட்டைக்கல் துர்க்கம் - 2029 அடி, இரத்தினகிரி 2800 அடி, சூலகிரி - 2981 அடி ஆகியன கொங்கு நாட்டுக் கோட்டைகளாம். 14ஆம் நூற்றாண்டு வரை இந்தக் கோட்டைகள் பெருமையுடன் இருந்தன. குறுநில மன்னர்கள் ஆண்டனர். 15ஆம் நூற்றாண்டுக்குப்பின் முகமதிய, ஆங்கிலேயப் படையெடுப்பால் அழிந்தன. திண்டுக்கல், நாமக்கல் கோட்டைகள் மட்டும் அழியாமல் இருக்கின்றன. சங்ககிரி, கிருஷ்ணகிரி, மகராஜக்கடை ஆகிய கோட்டைகள் சிதைந்துள்ளன. பிறகு முழுவதும் சிதைந்து போயின. குறுநில மன்னர்களுடன் கோட்டைகளும் அழிந்து போயின.

## நதிகளும் தலங்களும் :

கொங்குநாட்டு நதிகளும், புண்ணியத்தலங்களும், சிறப்பானவை. குடகிலே பிறந்த காவிரி கொங்கிலே தவழ்ந்து, சோழ நாட்டிலே தாயாகிச் சிறக்கின்றாள். கொங்கின் தவமணியாகப் பவனி வருகிறது. பவானியாறு வெள்ளி மலையில் பிறந்து காஞ்சியாறு பேரூர், வழியாக வந்து நொய்யல் நதியாக, நொய்யலில் காவிரியில் கலக்கிறது. ஆன் பொருனை என்று இலக்கியங்கள் புகழும் அமராவது கரூர் அருகில் காவிரியில் கலக்கிறது. சரவண பவனின் தொண்டர்களைப் புனித நீரால் தூய்மைப்படுத்தும் சண்முக நதி, கொல்லியாறு அறைப்பள்ளி ஈசன் திருவடி வணங்கி ஐயாறாக இழிந்து காவிரியில் கலக்கிறது. கொல்லி மலையின் கரைபோட்டான் ஆறு, பாலையாறு, வாழையாறு, நள்ளாயாறு, குடவாறு, தொப்பையாறு, திருமணிமுத்தாறு ஆகிய நதிகளும் கொங்கு நாட்டில் புண்ணியத்தலங்கள் எங்கும் புகழ்பெற்றனவாம். திருப்பாண்டிக் கொடுமுடி, காஞ்சிவாய்ப் பேரூர், திரு ஆவின் நன்குடி, திருச்செங்கோடு, திரு ஆனிலைக் கரூர், ஆகியன பாடல் பெற்ற தலங்களாம். அவிநாசி, நாமக்கல், பவானி, வெண்ணெய் மலை, சென்னிமலை, கொல்லி மலை அறைப்பள்ளி, ஈசன், வெஞ்சமாக்கூடல், திருமுருகன், பூண்டி ஆகிய புண்ணியத்தலங்களாம். "கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்" என்பது பழமொழி. கொங்கு நாடு சங்க காலம் தொட்டே வறட்சியும், வளமும், மாறி மாறிப் பெற்று வந்துள்ளது. மலைவளம் மிக்க

வாடி வந்துள்ளது. இந்த நாடே வளமாகுமானால் தமிழகத்தின் எல்லா நாடுகளும் வளம் பெற்றிருக்கும் என்பதையே இப்பழமொழி உணர்த்தும்.

## கொங்கு நாட்டை ஆண்டவர்கள் :

கரிகாற் சோழன் காலம் கி.மு. 60-10 ஆகும் என்பர். இவனைப் பாடியவர்கள் கிழாத்தலையார், பரணர், கபிலர் என்பவர்களாம். இவன் வெண்ணிப் போரில் சேரனையும், பாண்டிய மன்னனையும் கொங்கு நாட்டு 11 வேளிர்களையும வென்றான் என்று பரணர் பாடியுள்ளார். கொங்கு நாட்டை நாடாக்கியவன் இவன். இளஞ்சேட் சென்னி அழுந்தூர் வேள் மகளை மணந்தான். கரிகாலன் பிறந்தான். கரிகாழன் தாய் கொங்கு வேளாளப் பெண். இருங்கோவேள் என்ற கொங்கு நாட்டு வேளிர் அரசனை அடக்கிவைத்தான்.

## கொங்கு மக்கள் - குலப்பிரிவுகள் :

### 60 குலக்காணியாளர்கள்

1. அந்துவன்
2. ஆதி
3. ஆந்தை
4. ஆடர்
5. ஈஞ்சன்
6. ஓதாளன்
7. கண்ணன்
8. ஆவின்
9. கணவாளன்
10. காடை
11. காரி
12. கீரன்
13. குயிலர்
14. குழையர்
15. கூறை
16. கோவேந்தர்
17. சாத்தந்தை
18. செங்கண்ணன்
19. செம்மன்
20. செம்பூத்தன்
21. செல்வன்
22. செவ்வாயர்
23. செவ்வந்தி
24. சேரன்
25. சேடன்
26. செங்கண்ணி
27. சோழன்
28. சிலம்பன்
29. சேரலன்
30. தனஞ்செயன்
31. தூரன்
32. தோடை
33. நீருண்ணியர்
34. பனங்காடை

35. பன்ணை
36. பதரியர்
37. பயிரன்
38. பதுமன்
39. பனையன்
40. பாண்டியன்
41. பில்லன்
42. பனுமன்
43. பூசன்
44. பூந்தந்தை
45. பெரியன்
46. பெருங்குடி
47. பொன்னன்
48. பொடியன்
49. பொருள்தந்த
50. மணியன்
51. மயிலா
52. மாடை
53. முத்தன்
54. மூலன்
55. மேதி
56. வெளியன்
57. வெண்ணெய்
58. வேந்தன்
59. வெள்ளையன்
60. வில்லி

குலந்தழைக்க, குடிவளர குலக்காணிகளும் பெருகி வருதல் இயல்பு, புதியன புகுதலை ஏற்பது அற்புடைமை 60 குலக்காணியாளர் பற்றி முன்னேரே எழுதப்பட்டதால் மீதியை இப்பகுதியில் எழுதுவேன் இதற்கு மேலும் குலப்பிரிவுகள் என்று பல்கி இருப்பதையும் ஏற்கவேண்டும். ஒரு மரத்தின் கிளைகளை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

அழகு மலைக்குறவஞ்சி கூறிய 142 குலக்காணிப் பெயர்களைப் பட்டியல் இடுவோம் முன்னோர் பெயர்களைத் தாங்கியும் சில குடிப்பெயர்கள் அமைகின்றன அவைகளையும் நாம் ஏற்கவேண்டும்.

## 142 குலப்பெயர்கள்

1. பொன்னர்
2. சங்கர்
3. பூசர்
4. செம்பூதர்
5. காடர்
6. ஆவன்
7. சாத்தந்தை
8. கோவர்
9. குழாயர்
10. கோவேந்தர்
11. செம்பர்
12. பாவலர்
13. பண்ணர்
14. மாடை
15. நாரை
16. நச்சந்தை
17. ஆந்தை
18. பொருளந்தை

# புகழ் பூத்த கொங்குநாடு

- அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள்

சரித்திரம் காணாத சரித்திரப் பழமையுடைய திருநாடு நம் பாரதப் பொன்னாடு. அந்தப் பெருமையும், பீடும் நம் கொங்கு நாட்டுக்கும் உண்டு என்பதனை அறியும்போது நாம் மிகப் பெருமையடைகிறோம்.

தனக்கென்று தனியான எல்லை வரலாறு, கலை, பண்பாடு, பழக்க வழக்கம, நாகரிகச் சீர்மை முதலிய பண்புகளை ஆதியிலிருந்து பெற்று வந்திருக்கிறது கொங்குநாடு.

தமிழ்நாடு சேர, சோழ, பாண்டியர் பெயரில் மூன்று மண்டலங்களாக வழங்கியிருந்தது போலவே, தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் இரண்டையும் சேர்த்து தமிழ்நாட்டை ஐந்து மண்டலமாக வழங்கும் மரபும் முன்பே இருந்து வந்திருக்கிறது.

தண்டியலங்காரப் பழம்பாடல் மேற்கோள் ஒன்று "வியன் தமிழ்நாடு ஐந்து" என்று தெளிவாகக் குறிப்பிடுகிறது. திருமூல தேவரின் திருமந்திரமும் "தமிழ் மண்டிலம் ஐந்து" என்று குறிக்கிறது. வராக மிகிரர் தம் நூலில், கொங்கு மண்டலத்தைத் தனிநாடாகக் குறிப்பிடுகிறார் என்று கொங்கியல் அறிஞர் திரு. செ. இராசு குறிப்பிட்டுள்ளார்.

கொங்கு நாடு தொடக்கத்தில் மிகுதியாகக் காடடர்ந்து கிடந்த பகுதியாக இருந்தது. வேட்டுவர்களும் சில வேளாண்மைத் தொழில் புரிபவர்களும் இங்கு பூர்வ குடிகளாக இருந்திருக்கின்றனர். பவானியாற்றங்கரையிலும், ஆன்பொருநையென்னும் அமராவதியாற்றங்கரையிலும், காவிரிக்கரைப் பகுதியிலும் பழைய நன்செய் நிலங்கள் இருப்பது இதற்குச் சான்றாகும்.

நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி மாவட்டங்களும் தற்போதைய திண்டுக்கல், கரூர் மாவட்டத்தின் பகுதிகளும் அடங்கிய பெரியதொரு நிலப்பரப்பு கொங்கு நாடாகும்.

சங்க காலத்திலேயே கொங்கு மக்கள் அரேபியர்கள், ரோமானியர்கள், கிரேக்கர்கள், எகிப்தியர்கள் முதலிய மேலை நாட்டாரோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்திருக்கிறார்கள். முத்தும், மிளகும், சந்தனமும், மாணிக்கமும், ஏலம், கிராம்பும் ஏராளமாக மேல் நாடுகட்குக் கொங்கு நாட்டின் வழியாக ஏற்றுமதியாகியுள்ளன.

கள்ளிக்கோட்டையிலிருந்து முட்டம், வெள்ளலூர், பல்லடம் வழியாக காங்கேயப் பகுதிக்கு வெளிநாட்டு வாணிகம் மிகப்பெரும் அளவில் நடந்திருக்கிறது.

கொச்சி, கள்ளிக்கோட்டையாகிய ஊர்களிலிருந்து பொள்ளாச்சி, உடுமலை வழியாகக் காங்கேயம் சென்ற வழித்தடங்கள் இருந்தமைக்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

கொங்கு நாட்டில், பொள்ளாச்சி, வெள்ளலூர் முதலிய பகுதிகளில் ஏராளமான கிரேக்க ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. இன்னும் கிடைத்து வருகின்றன. பொள்ளாச்சியையடுத்துள்ள சிங்காநல்லூரில் கிடைத்துள்ள ரோமானியக் காசுகளில் அகஸ்டஸ் சீசர் உருவம் பொறித்துள்ளதோடு "அகஸ்டஸ் சீசர்" என்று ரோமானிய எழுத்திலும் சுற்றி எழுதப்பட்டுள்ளது!.

ஐராவதம் மகாதேவன், ஈரோடு இராசு, ஆசிரியர் இளங்கோ ஆகியோர் நிறைய இத்தகைய காசுகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

வேட்டுவர்களும் வேளாளர்களும் பூர்வ குடிகளாக இருந்த கொங்கு நாட்டிற்குச் சோழநாட்டிலிருந்து உழவுத் தொழில் நுட்பங்கள்

பல தெரிந்த உழவர்கள் குடியேறியது கொங்கு நாட்டின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தது.

சோழநாட்டைத் தங்கள் உழைப்பால் பொன் விளையும் பூமியாக மாற்றிய வேளாளர்கள், கொங்கு நாட்டையும் அத்தகைய பூமியாகத் தம் உழைப்பால் மாற்றினர். இந்த சோழ நாட்டு வேளாளர்கள் கொங்கு நாட்டுக்கு வந்தவுடன் கொங்கு வேளாளர்கள் எனப் பெயர் பெற்றனர். அவர்கள் இங்கு வந்து குடியேறியவர்கள் என்பதனை, "குடியானவர்" என்னும் இன்று வழங்கும் பெயரே காட்டி நிற்கிறது.

ஆனால், இக்குடியேற்றம் சங்க காலத்திலேயே நிகழ்ந்தேறிவிட்டதாகத் தெரிகிறது.

வண்ணக்கன், வெளியன், மூலன், கீரன், பதுமன், செங்கண்ணன், செம்பன், காரி, மணியன், அந்துவன், ஆதி, கண்ணன் முதலிய பெயர்கள் சங்க காலத்தில் புகழ் பெற்றிருந்த புலவர் பெருமக்களின் பெயர்கள் ஆகும்.

இதில் வியப்பு என்னவென்றால், மேற்கூறிய இப்புலவர்கள் பெயர் எலலாம் தற்போது, கொங்கு வேளாளர்களின் குலப்பெயர்களாக இன்றும் விளங்கி வருவதேயாம்.

பிராமணர்கள் கோத்திரப் பெயர்களாக பழங்கால முனிவர்கள் பெயர்களை வைத்துக் கொள்வதுபோல் (உ-ம் பார்த்து வாச கோத்திரத்து நச்சினார்க்கினியர், கௌசிகன் தாமோதரன்) கொங்குவேளாளர்கள் முன்பு தங்கள் மரபில் பிறந்து புகழ் பூத்திருந்த புலவர் பெருமக்கள் பெயர்களைத் தங்கள் குடிப்பெயர்களாக வைத்துக் கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

**வண்ணக்கன் கூட்டம், மூலன் கூட்டம், செங்கண்ணன் கூட்டம், அந்துவன் கூட்டம் முதலிய கொங்குவேளாளர் குலப் பெயர்களில்**

வண்ணக்கன், மூலன், செங்கண்ணன், அந்துவன் முதலிய பெயர்கள் சங்க காலப் புலவர்களின் பெயர்கள் என்பது நாம் அறிய வேண்டிய ஒன்றாகும்.

சாத்தந்தை என்பது கொங்குவேளாளர் குலப் பெயர்களில் ஒன்றாகும். சாத்தன் + தந்தை என்பது பேச்சு வழக்கில் மருவிச் சாத்தந்தை என்று வழங்குகிறது. இப்படி மருவி வழங்குவதற்குத் தொல்காப்பியர் தம் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் புணர்ச்சி விதி கூறியுள்ளார் என்றால் கொங்குவேளாளர்களின் பழமைக்கும் பெருமைக்கும் வேறு என்ன சான்று வேண்டும்?

இங்கு வந்த கொங்குவேளாளர்கள் வேளாண்மையில் பல புதுமைகள் படைத்தார்கள்.

அன்றே, பயிர்களைத் தாக்கிய பூச்சிகளை வெள்ளைய வெங்காயப் புகைபோட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

"வீணாகவே அன்னம் எல்லாம் சப்பி
வேதனை செய்கின்ற பூச்சிகள்
வெகுதூரம் ஏக நடுக்காட்டில் புகைபோட
உள்ளியை இரண்டு முழ மேட்டுமேல் வைத்து
ஓராள் ஊதி இரவு கழியவும்"

(உள்ளி - வெள்ளை வெங்காயம்) என்று இச்செய்தியினைப் பழைய கோட்டைப் பட்டயப்பாடல் கூறுகிறது.

மலை எருதுகளையும், காங்கேயம் பசுக்களையும் கூடச் செய்து (Cross) கலப்பினம் ஆக்கி, உழவுத் தொழில் புரியப் பெரிதும் உதவும் வலிமையான காங்கேயம் காளைகளை உருவாக்கியுள்ளனர்.

ஊர்க்கூட்டம், நாட்டுச்சபை, சித்திரமேழிப் பெரியசபை என்று மூன்றடுக்குகளை, கொங்கு 24 நாடுகளிலும் ஆட்சி மன்றங்களாக அமைத்துக் கொங்கு வேளாளர்கள் ஆட்சிபுரிந்தனர்.

இது, குடியாட்சியின் தொட்டில் எனக் கருதப்படும் கிரேக்க நாட்டின் சிடி ஸ்டேட்ஸ் (**city states**) அமைப்பு முறையை அப்படியே நினைவுபடுத்துகிறது.

கொங்கு வேளாளர்கள் தனித் தனிப் பிரிவுகளாக வாழாமல், ஒரு சமுதாய இனமாக வாழ்ந்துள்ளனர். கொங்கு நாட்டில் வாழும் 18 வகை உழவின் துணைத் தொழிலாளர்களையும் அரவணைத்துக் காக்கும் ஓர் அன்புச் சமுதாயமாகக் கொங்கு வேளாளர் சமுதாயம் இயங்கியது. பின்னாளில் இந்தப் பதினெட்டு வகைத் தொழில் புரிந்தவர்களும் 18 சந்ததியினராக மாறினர். வேளாளர் புராணம் இவற்றையெல்லாம் தெளிவாக விளக்கி நிற்கிறது.

சங்ககாலம் முதல் பெருங்கதையாசிரியர் கொங்குவேளர் முதலிய புகழ்பெற்ற இலக்கியப் படைப்பாளிகளைக் கொங்கு மண்டலம் தமிழ் இலக்கிய உலகுக்குத் தன் பங்காகத் தந்துள்ளது. கம்பர் பெருமான் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள சமுதாயம் கொங்கு வேளாளர் சமுதாயம்.

இந்த வேளாளர்களின் மூலத்தோற்றத்தைக் கங்கைக் கரையிலிருந்து தொடங்குகிறது வேளாளபுராணம்.

பழைய சேரநாடு சிந்து நதிக்கரையில் அமைந்திருந்தது. அப்படி அமைந்திருந்தால்தான், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் குருக்ஷேத்திரத்தில் நடந்த பாரதப் பெரும் போரில் இரு தரத்தினருக்கும் பெருஞ்சோறு அளிக்க முடிந்தது.

பழைய சோழநாடு கங்கைக்கரைப் பகுதியாகவும், சிந்து நதிக்கரைப் பகுதி பழைய சேரநாடாகவும் இருந்தன. தென்னாடு முழுவதும் பாண்டிய நாடாக இருந்தது. இதனை இன்றைய ஆய்வுகள் மெய்ப்பிக்கத் தொடங்கியுள்ளன.

மொகஞ்சதாரோ, ஹரப்பா எழுத்துக்கள் முழுவதும் தமிழ் எழுத்துக்கள் என்பது இன்று ஐயத்திற்கிடமின்றி ஆய்வுலகம் நிரூபித்துவிட்ட பின்பும், சேரநாட்டின் பழைய இருப்பிடம் சிந்து

நதிக்கரை என்பதில் இனியும் ஐயத்திற்கிடமேது?

தமிழர்கள் இமயம் வரையிலும் ஒருமொழி வைத்து உலகாண்டனர் என்று பதிற்றுப்பத்துக் கூறுகிறது. இப்பொழுதுதான் அது உயர்வு நவிற்சியல்ல, உண்மை நிகழ்ச்சியென்று தமிழ் உலகுக்குப் புரியத் தொடங்கியுள்ளது.

இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், இமயத்தில் புலி பறக்கவிட்ட கரிகாலன் என்பவையெல்லாம் கற்பனைப் பட்டப்பெயர்கள் அல்ல, உண்மைப் பெயர்கள் என்பதனை இப்பொழுதுதான், வரலாற்று ஆய்வாளர்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

இறையனார் அகப்பொருள் உரையும், கொங்குநாட்டில் பிறந்த சிலம்பின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் முப்பத்தைந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தலைச்சங்கம் இருந்தது என்று கூறுவது உண்மையான சரித்திரக்கூற்று என்பது மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.

மண்ணுலகில் தோன்றிய எல்லாச் சரித்திரச் சான்றுகளும் ஒருகாலத்தில் அழிந்துபோகும் தன்மையுடையவை. ஆனால் வானம் ஏந்தி வைத்துள்ள சரித்திரச் சான்றுகள் என்றும் அழியாதவை. யுகம் யுகங்களாக நிலைத்து நிற்பவை.

வானம் ஒரு சிறந்த வரலாற்று நாட்காட்டி. அது ஒரு சரித்திரப் பதிவு அலுவலகம். சென்னை பேராசிரியா திரு. சீனிவாச ராகவன் அவர்களும், தஞ்சை இராமதுரை அவர்களும், அவர்களின உதவியாளர்களும் கண்டுபிடித்துள்ள வான் இயல் ஆய்வுப் பேருண்மைகள் நம் பண்டைய சரித்திரத்தின் மேல் புதிய வெளிச்சத்தினைப் பாய்ச்சத் துவங்கியுள்ளன.

விரைவில் நம் தென்மையும் நாகரிகமும் பற்றிய செய்திகள், உலக சரித்திர வீதியில் புதிய வெளிச்சக் கீற்றுகளைப் பாய்ச்சப் போவது உறுதி. அப்பொழுது நம் கொங்கு நாட்டு வரலாறும் புதிய பரிணாமங்களைப் பெற்று திகழப்போவதும் உறுதி.

# புகழ் பூத்த கொங்குவேளாளர்

- முனைவர் அமுதன்

தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும் சூழ்கலை வாணர்களும் இந்தக் கொங்கு இனம் என்று பிறந்தது, என்று வளர்ந்தது என்று உணர முடியாத தொண்மை வாய்ந்தது நம் கொங்கு வேளாளர் சமுதாயம் ஆகும். சரித்திரம் காணாத சரித்திரம் நம் கொங்கு சமுதாயத்திற்கு உண்டு.

கடவுள் காட்டைப் படைத்தார். கொங்கு வேளாளர்கள் நாட்டைப் படைத்தார்கள். கடவுள் மழையைப் படைத்தார். இந்த வேளாள பெருமக்கள் மடையைப் படைத்தார்கள். மதகைப் படைத்தார்கள், அணையைப் படைத்தார்கள்.

கங்கைக் கரையிலும் காவிரிக் கரையிலும் நாகரீகம் கொஞ்சுகிறது என்றால் நம் முன்னோர்கள் உழைத்த வியர்வையின் எச்சம் அது என்று உலகம் உணரும் ஒரு நாள் விரைவில் வரும்.

நீங்களே விளைச்சலையுண்டாக்கி நாடு காத்தற்குரியவர்கள் என்று திருமாலால் புகழப் பெற்றவர்கள் வேளாளப் பெருமக்கள். ஆதலின் நாராணன் புகழ் எண்ணுயிரம் குடி என்று கொங்கு மண்டல சதகம் நம் வேளாளப் பெருமக்களை வாயாரப் புகழ்கின்றது.

கொங்கு நாடு காவிரியை மையமாக வைத்து மேல் கொங்கு, கீழ்கொங்கு, வடகொங்கு, தென்கொங்கு என்னும் பிரிவுகளைப் பெற்று 24 கிளை நாடுகளையுடையதாய், கொல்லிமலை, வெள்ளிமலை, தலைமலை, வராகமலையென்னும் நான்கு மலைகளை எல்லைகளாய் உடையதாய் விளங்கிற்று.

சங்க காலத்தில் கொங்கு நாட்டை கோசர்களும் இருங்கோவேள் முதலிய வேளிர் மரபினர் ஆட்சிபுரிந்துள்ளனர்.

அக்காலத்துப் புகழ் பெற்ற வள்ளல்களில் அதிகமான மரபினர் தகடூர்ப் (இன்றைய தர்மபுரி மாவட்டம்) பகுதியையும் வல்வில் ஓரியும் அவன் மரபினரும் கொல்லி மலலைப்பகுதியையும் வையாவிக் கோப்பெரும் பேகனும் அவன் மரபினரும் பழனிமலைப் பகுதியையும் குமண வள்ளல் மரபினர் முதிரமலைப் பகுதியையும் சீரோடும், சிறப்போடும் ஆட்சி புரிந்திருக்கின்றனர். அக்காலத்தில் சேர வேந்தர்கள் போராடிக் கொங்கு நாட்டைக் கைப்பற்றியிருக் கின்றனர்.

கீரன், மூலன், செங்கண்ணன், வண்ணக்கன் முதலிய கூட்டத்தைச் சேர்ந்த நம் முன்னோர்கள் சங்கப் புலவர்களாய் வீற்றிருந்து தமிழ் வளர்த்துப் புகழ் பெற்றுள்ளார்கள்.

பெரிய புராணம் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத் தொகை. அந்தத் திருத்தொண்டத்தொகை பாடுவதற்குக் காரணமாயிருந்த விறன் மிண்ட நாயனார் கொங்கு வேளாளப் பெருமகன் ஆவார்.

புகழ்பெற்ற எகிப்திய நாட்டுப் பேரரசி, எழிலரசி, கிளியோபாட்ராவின் மார்பில் தவழ்ந்த வைரம் நம் கொங்கு நாட்டைச் சார்ந்த காங்கேயத்தின் அருகில் உள்ள படியூரில் இருந்து கொண்டு சென்றதாகும் என புகழ்பெற்ற மேலை நாட்டுச் சரித்திர ஆசிரியர் தாலமி குறித்துள்ளார்.

வள்ளல்களுக்குப் பின், கொங்குநாட்டில் தமிழ் வளர்த்தோர் கம்பரை ஆதரித்து இராமாயணம் பாடுவித்த வெண்ணெய் நல்லூர்ச்சடையனும், பவணந்தியைக் கொண்டு நன்னூல் செய்வித்த சீயகங்கனும், வில்லிபுத்தூராரை ஆதரித்துப் பாரதம் பாடுவித்த வக்கபாகை வரபதியாட்கொண்டானும் கொங்கு நாட்டிற்குரிய வர்களான வேளாளப் பெருமக்கள் எனப் பெரும்புலவர் வே.ரா. தெய்வ சிகாமணிக்கவுண்டர் அவர்கள் கூறுகின்றார்கள்.

சர்க்கரை மரபினர், காங்கேய மரபினர், பல்லவராய மரபினர், வேழுறவுடையார் மரபினர் ஆகியோர் கொங்கு நாட்டில் புலவர் பெருமக்களை ஆதரித்துத் தமிழ் வளர்த்த பெருமக்கள் ஆவார்கள்.

நாட்டு விடுதலைப்போரில் முன்னிடம் பிடித்து வெள்ளையரை நாட்டை விட்டோட உயிருள்ளவரை போராடிய மாவீரன், தீரன் சின்னமலை கொங்கு வேளாளப் பெருமகன் ஆவன்.

ஆங்கிலேயர்க்குக் குதிரையில் கொண்டு சென்ற கப்பண மூட்டையைப் பிடுங்கிக் கொண்டு சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையில் இருக்கிற சின்னமலை பிடுங்கிக் கொண்டது என்று போய்ச்சொல்லடா என்று மேனாம்பு பேசிய சின்னமலை எனும் தீர்த்தகிரிக்கவுண்டரின் வீரம் கட்டபொம்மு, மருது சகோதரர் வீரத்திற்கு எள் முனையளவும் குறைந்தது அல்ல என்பதை வரலாற்றாசிரியர்கள் இனியாவது உணர வேண்டும். உணர்ந்து உலகுக்கு உணர்த்தவேண்டும்.

நம்மையடக்கி ஆண்ட ஆங்கிலேயர்களே கொங்கு வேளாளப் பெருமக்களைப் புகழ்ந்து எழுதி வைத்துப்போய் உள்ளனர் என்பதறிய நம் முன்னோர் பெருமையை எண்ணி எண்ணி நம் தோள்கள் பூரிக்கின்றன.

The Kongu Vellalas differ so strikingly from the rest of the Vellalas, Their name evidently derived from that old Kongu country They live in compact communities, generally in hamlets and seems to have little in common with the other Vellalas except their name.

கொங்கு வேளாளர் இனம் இதர வேளாளர்களிலிருந்து என்று முற்றிலும் மாறுபட்ட இனமாகும். அவர்களுடைய கொங்கு வேளாளர் எனும் பெயர் பழைய கொங்கு நாட்டிலிருந்து தோன்றியதாகும். ஒன்றயாக இணைந்து கூட்டம் கூட்டமாக நம்

பொதுவாகக் கிராமங்களில் வாழுகிறார்கள். இதர வேளாளர்களுடன் தொடர்பு இன்றி வேளாளர் என்னும் பட்டத்துடன் தனி இனமாக வாழ்கிறார்கள்.

கொங்குவேளாளர் தம் இன ரீதியாக இணைந்து மிகவும் உறுதியான கட்டுப்பாடு வாய்ந்த வலிமையான இனமாக (Highly organised Community) இயங்கி வந்தனர் என வில்சன் எனும் வரலாற்றாசிரியர் குறித்துள்ளார்.

ஊர்க்கவுண்டர் (காணியாளர்), பல ஊர்கள் கொண்ட நாடுகளுக்கு நாட்டாண்மைக்காரர், பல நாடுகள இணைந்த பகுதிகளுக்குப் பட்டக்காரர், கொங்கு இருபத்து நான்கு நாட்டு மக்களுக்கும் தலைவராகத் தலைமைப் பட்டக்காரர் என ராணுவ ரீதியாக கட்டுக் கோப்பான வலிமை வாய்ந்த தனியினமாக இந்த இனம் இயங்கியிருக்கிறது.

ஒரு கொங்கு வேளாளன் சிரித்தால் கொங்கு இருபத்துநான்கு நாட்டுக் கொங்கரும் சிரிப்பார்கள்.

ஒரு கொங்கு வேளாளன் கண்ணீர் வடித்தால் கொங்கு இருபத்து நாட்டுக் கொங்கு வேளாளரும் கண்ணீர் வடிப்பார்கள்.

ஒரு கொங்கு வேளாளன் கொடுவாளை உயர்த்தி தோள்காட்டினால் கொங்கு இருபத்து நான்கு நாட்டுக்கொங்கரும் தோள் கொட்டி வாள் ஏந்துவார்கள் என்று கொங்கு வரலாற்று அறிஞர் டி.எம்.காளியப்பா கூறியுள்ளதைப் படிக்கும்போது நம் உள்ளமெல்லாம் புல்லரிக்கிறது.

கொங்கினத்தின் பழைய வரலாறு எழுச்சியைத் தரவல்ல தீரம்மிக்க வீரவரலாறு.

குடிப்பெருமை தெரியாத மக்களுக்கு பெருமிதம் வராது. தன்னான்மை அரும்பாது. தாழ்வுணர்ச்சியே மேலோங்கி நிற்கும்.

பழைய சரித்திரம் புதிய சரித்திரம் படைக்க தூண்டும் தூண்டு கோலாக அமையவேண்டும்.

சுவாமி சித்பவானந்தா, சுவாமி சச்சிதானந்தா, சர்க்கரை மன்றாடியார், அருட்செல்வர் நா. மகாலிங்கம், துணைவேந்தர் வி.சி. குழந்தைசாமி, விண்வெளிப் பேரறிஞர் கே.எம். வாசீம் போன்ற எண்ணற்ற மேதைகளை இன்றும் உலகுக்கு ஈந்துள்ள இனம் இந்த இனம்.

அன்று சிலப்பதிகாரத்திற்கு உரைதேவைப் படுகையில் அடியார்க்கு நல்லாரை வேண்டி உரை வகுக்க வழி செய்தவர் காங்கேயத்தைச் சார்ந்த பொப்பண்ணகாங்கயன் எனும் கொங்கு வேளாள வள்ளல் ஆவார். அவரை அடியார்க்கு நல்லார் இவ்வாறு புகழ்ந்து பாடியுள்ளார்.

"பொப்பண்ண காங்யர்கோன் சோற்றுச் செருக்கல்லவோ தமிழ் மூன்றுரை சொல்வித்ததே" என்பது அவர் வாக்கு. இன்றும் இந்த மரபு பொய்யாது மெய்யாகியுள்ளதைப் பார்த்து வியக்கிறோம். வடலூர் வள்ளற் பெருமானின் திருஅருட்பா ஆறு திருமுறைகளுக்கும் இனிய எளிய உரைவேண்டும் என்று அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள், உரைவேந்தர், சித்தாந்த கலாநிதி, ஒளவை துரைசாமி பிள்ளை அவர்களை வேண்டிக் கொண்டார்கள். அவர்களும் இசைந்து பொள்ளாச்சி சக்தி நிலையத்திலேயே மூன்றாண்டுகள் தங்கி அந்தப்பேருரையை எழுதி முடித்துவிட்டு உரையின் இறுதியில் அருட்செல்வரின் புனிதப் பணியை அன்று அடியார்க்கு நல்லார் புகழ்ந்த பாணியிலேயே புகழ்ந்து இவ்வாறு தம் நன்றிக் கடனை நவின்றுள்ளார்கள்.

"ஆகா திருவருட்பாவுக்கு உரை செய்யும் ஆற்றலினைச்
சேகார் பொள்ளாச்சி மகாலிங்கனார் தந்த செஞ்சொற்றினால்
மாகாதலோடு எழுதும் திறத்தை மலிவித்ததால்
தேகாத்ம போதம் வழங்கிய தில்லைச் சிவ பரமே"

ஆகவே அன்றும் இன்றும் செயற்கரிய செயல்களைச் செய்தே புகழ்பூக்கும் கொங்கு வேளாளர் எனும் நம் பேரினம் ஒற்றுமைபூண்டு இனி வருங்காலத்தும் செயற்கரிய செயல்கள் பல செய்யச் சுபதம் பூண வேண்டும். நம் குடியுயர நாம் முயன்றால் நம் முயற்சிகளுக்குத் தெய்வமே முன்னின்று உதவும் என்பது வள்ளுவர் வாக்கு.

"குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்நிறும்" - திருக்குறள்

தான் பிறந்த சமுதாயத்தை உயர்த்தப் பாடுபடுவேன் என உழைக்கும் ஒருவனுக்கு உதவி செய்ய தெய்வம் தன் ஆடையை வரிந்து கட்டிக் கொண்டு முன் வந்து நிற்கும் என்னும் வள்ளுவர் பெருமானின் கருத்துரை நம் ஒவ்வொருவரின் நெஞ்சிலும் நீங்காது நிற்கட்டும்.

## கொங்குமக்கள் சிறப்புகள்

1. கொங்குவேளாளர் என்று வழங்கப்படும் கொங்குமக்களினம் சங்ககாலம் தொட்டு தனித்தன்மை பல கொண்டு வாழ்கிற இனம்.

2. ஆணுக்குப் பெண் பரிசம் (இன்றைய வரதட்சிணை) கொடுப்பதற்கு பதிலாக, பெண்ணுக்கு ஆண் பரிசம் கொடுக்கச் செய்து "பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்று பெண்ணினத்தைப் பீடு பெறச்செய்த இனம்.

3. தமிழ்மனம் கமழும் கம்பரின் மங்கலவாழ்த்துப் பாடலோடு, திருமணம் நிகழ்வுறுகிற தனித்தமிழ்ப் பேரினம்.

4. ஒரு குடிமகளை, உயர்ந்தோர் கூறும் வாழ்த்துரைக்குத் தேர்ந்தெடுத்து, சாதி ஏற்றத்தாழ்வுகளை அன்றே சாய்க்க முனைந்த இனம்.

5. "மங்கல வாழ்த்து(க் காதை)" என்று சிலம்பில் வரும் செந்தமிழ்ச்

சொல் தொடரை இன்றும் திருமணத்தில் மணக்க மணக்க வழங்கி வரும் இனம்.

6. "அகநானூறு கூறும் திருமண நிகழ்ச்சிகளை இன்றும் அப்படியே உள்ளடக்கிக் கொண்டிருக்கும் இனம் எது என்றால், அது இந்தப் புகழ்பூத்த கொங்கு வேளாளப் பேரினம் ஆகும்.

செல்வச்செழிப்பும், நாகரீக ஏற்றமும் பூண்டு, வீறார்ந்த உழவுத் தொழிலை மேற்கொண்டு உலகு வியக்க புலவர் போற்ற வாழ்ந்திருந்தது கொங்கு வேளாளர் பேரினம்.

கொங்கு வேளாளர்கள் சங்க காலந் தொட்டுத் தனியினமாக வாழ்ந்து வருபவர்கள். வீரமும் ஈரமும் இணைந்த இவர்கள் தீர வாழ்வு, தமிழ்நாட்டின் சரித்திரப் பக்கங்களில் ஆழமாகத் தடம் பதித்திருக்கின்றன.

கொங்கு வேளாளர்கள் இயற்கையோடிணைந்து வாழும் உழவு வாழ்க்கையை மேற்கொண்டவர்கள். தாவரங்களே அவர்கள் தோழர்கள்.

அந்த நன்றியைக் காட்ட அவர்கள் திருமணச் சடங்குகளில் முதற்சடங்காக, ஒரு தாவரத்தை (பாலைக்கால்) நாட்டி, அதற்குப் பூசனை இயற்றிய பிறகே, மற்றைய எல்லாச் சடங்குகளும் தொடங்குகின்றனர். இந்த அரிய சடங்கு அவர்களின் நன்றி மறவாத ஒப்புயர்வற்ற பண்பாட்டைக் காட்டுகிறது.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்பது தொல்காப்பியம். தொல்காப்பியம் காட்டும் அந்த நாவிதர் அருமைக்கார ஐயராகக் கொங்கு வேளாளர் திருமணச் சடங்கில் வாழ்ந்து வருகிறார்.

கொங்கு 24 நாடும், ஒருவர் ஆணைக்குக் கட்டுப்பட்டுநடக்கும் பெருமையை அன்று பெற்றிருந்தது என்பதற்கு, நாட்டுக்கல் நட்டு நாட்டுத்தலைவனாக அதனைப் போற்றி வணங்கி மணமக்கள்

மணஞ்செய்து கொள்ளும் முறை மிகச்சிறந்த பண்பாடாகிறது.

புதல்வரைப் பயந்த திருவயிறுடைய பெண்டிர் மணச்சடங்குகளை முன் நின்று நடத்துவதாக அகநானூறு அன்று கூறியது. அது கொங்கு வேளாளர் திருமணத்தில் இன்றும் நடக்கிறது.

ஆணுக்குப் போலவே பெண்ணுக்கும் சமமான உரிமையுண்டு. இன்று சட்டம் சொல்வதை, அன்றே "இணைச்சீர்" என்ற சீரின் வழியாக கொங்கு சமுதாயம் உலகுக்கு உணர்த்தியது.

கொங்கு வேளாளர் திருமணத்தில், மணமக்கள் இருவர் கைகளையும் ஒன்றன்மேல் ஒன்றிருக்க, அதற்கு மேலேயும் கீழேயும் தந்தையர் இருவர் கைகளும் இருக்க, நீர்வார்க்கப்படுகிறது.

"நம் கைகளில் இருந்த இவர்கள் இனித்தம் கைகள் இணைந்து வாழ இருக்கிறார்கள். அவர்கட்கு இனி அவர்கள் கரங்களே துணை, ஆயினும் எங்கள் கரங்களும் அவர்களுக்கு எப்போதும் துணையாக இருக்கும் இது சத்தியம் என்னும் அதிய பொருளை இச்சடங்கு உணர்த்தி நிற்கிறது.

காலப்புயல் களவுகொண்டு போய்விடாதபடி, கொங்குவேளாளர் திருமணச் சடங்குகளும் அவற்றின் கோட்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுவிட வேண்டும். பொருள் பொதிந்தவையாய் விடியவிடியச் செய்தாலும் மீந்து கிடப்பவையாய் உள்ளவை கொங்குவேளாளர் திருமணச்சடங்குகள். அவற்றையெல்லாம் கால வெள்ளம் அடித்துச் சென்றுவிடாதபடி ஆவணப்படுத்திவிடுகிற பணி ஓர் அரிய பணி.

என் மண் இனியது, என்மொழி இனியது, என் மரபு இனியது, அதன் சடங்குகள் இனியன, அவை காட்டும் கருத்துக்களும் இனியன, அவை சுட்டும் பண்பாடுகள் இனியன, அந்தப் பண்பாடுகளோடு வாழ்ந்த எங்கள் நாகரிகமும் இனியது என்று கூறிப் பெருமிதம் கொள்ளக் கொங்கு வேளாளப் பெருமக்கட்கு என்றும் உரிமையுண்டு. இத்தரைதன்னில் முத்திரை பதித்த இனம் கொங்குவேளாளர் பேரினம்.

# கொங்குவேளாளர் வரலாற்றில் சில துளிகள்

கொங்கு வேளாளருக்கு கொங்கர் எனும் பெயர் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய காலத்திலேயே ஏற்பட்டதாகும்.

கொங்கு நாட்டின் பெரும்பகுதி பாலைநிலம். எங்கும் வறண்ட மேடுபள்ளங்கள். ஆறுகளோ எங்கோ ஓடிக்கொண்டிருந்தன. குடியேறி வாழ்வதற்குத் தகுதியற்றதெனப் பிறரால் ஒதுக்கப்பட்டு தரிசாகக் கிடந்த கங்குதான் (ஓரம்) கொங்கு நாடு. கொங்கர் பயிர்த் தொழிலைப் புகுத்தியவர்கள். பாலைவனத்தை உழைப்பால் சோலைவனம் ஆக்கியவர்கள்.

கொங்கு நாடு ஏற்பட்டு இன்றைக்கு ஏறத்தாழ 4270 ஆண்டுகள் ஆனதாக வரலாறு கூறுகிறது. கொங்கு வேளாளர் கொங்கர் என்ற பெயருடன் கொங்கு நாட்டிலே சிறப்புடன் வாழ்ந்த வரலாறு சங்க நூல்களில் காணக் கிடைக்கின்றது.

கொங்கு நாடு எனும் பெயர் கங்கு நாடு எனும் பெயர் வழியாகவும் கொங்கர் எனும் சொல் கங்கர் எனும் சொல் வழியாகவும் தோன்றியவையாகும். உண்மைபேசி, உண்மை நெறியில் நின்று சொன்ன சொல்லைக் காப்பாற்றும் மரபு கொங்கு மரபு "வெள்" எனும் சொல் உண்மை எனப் பொருள்படும். வெள் + ஆளன் = வெள்ளாளன். வெள்ளாளன் என்பவன் உண்மையை ஆளுகிறவன், அறவழி நிற்பவன், சத்திய சீலன் எனும் பொருள்தரும். வெள்ளாளன் எனும் சொல் மருவியே வேளாளன் ஆயிற்று. வெள்ளாளர் என்னும் சொல் இன்றும் வழக்கில் இருப்பதைக் காணலாம். கொங்கு நாட்டிலே கிடைத்துள்ள கல்வெட்டுகளிலும் வெள்ளாளன் எனும் சொல்லே கையாளப் பட்டுள்ளது. ஓரிடத்திலே கூட வேளாளன் எனும் சொல் இல்லை.

கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலே கொங்கு வேளாளருக்கு "மிண்டர்"

என்ற பட்டம் வழங்கிவந்த செய்தி வரலாற்றில் உள்ளது. "மிண்டன்" என்றால் வலிமைமிக்கவன் வீரமானவன், சுறுசுறுப்பானவன் எனும் பொருள்படும். "மிண்டின்" திரிபே முண்டல். அவன் என்னோடு முண்டுகிறான் என்பர். பழங்காலக் கல்வெட்டுகளில் காமிண்டன் எனும் சொல் கொங்கு நாட்டு தலைவர்கட்கு வழங்கப்பட்டுள்ளது. காமிண்டன் என்றால் குடிகளைக் காப்பதில் வல்லவன் என்று பொருள். அந்தக் காமிண்டன் சொல்லே பின்னர் கவுண்டர் என உருவெடுத்தது. கொங்கராகிய கொங்கு வேளாளரைத் தழுவி வாழ்ந்த எல்லா மக்களும் கொங்கு அடைமொழியோடு அழைக்கப்பட்டனர். கொங்கு நாவிதன், கொங்கு வண்ணன், கொங்குப் பறையன், கொங்கு முதலி, கொங்குச் செட்டி, கொங்குக் குயவன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

கொங்கு நாகரிகம் தந்தை வழி தழுவிய சமூகம் ஆகும். தந்தை, பாட்டன், முப்பாட்டன்ஆகிய முன்னோர் பழக்க வழக்கங்கள் குடும்ப மரபுகளாகவும் கூட்டத்தின் சம்பிரதாயமாகவும் அனுசரிக்கப்பட்டன. ஐயன் கோயில், நாட்டு ஐயன் கோயில், நாட்டுராயன் கோயில் வழிபாடு, தந்தை வணக்கத்தின் மரபிலே தோன்றியது. ஆயி அம்மன், கொங்காளம்மன், பொன் காளியம்மன் ஆகிய வழிபாடுகள் கொங்கரைப் பெற்றெடுத்த தாய்க்குல வழிபாடு. கொங்கர் தந்தை, தாய், உழவு, மழை ஆகிய கண்கண்ட தெய்வங்களையே வணங்கினர். ஆரியர்களைப் போல் காற்று, இந்திரன், சந்திரன், சூரியன், ருத்திரன் ஆகிய கண்ணுக்கு எட்டாத தெய்வங்களைத் தொழவில்லை. கொங்கு வேளாளரின், உண்மை வாழ்க்கையோடு ஒட்டிய கண்கண்ட தெய்வ வழிபாடு நினைவு கூறத்தக்கது.

கொங்கு வேளாளர் தென்னாட்டின் தொன்மையான பூர்வகுடிகள். தாய்மொழி தமிழ், தமிழ் நாகரிகத்தின் முன்னோடிகள். தமிழ் தோன்றிய காலத்திலிருந்து இம் மண்ணில் வீரம், கொடை, பண்பு நாகரிகத்துடன் வாழ்ந்து வரலாற்றைச் சமைத்த ஓர் இனம்.

# புலவர்கள்

கொங்கு நாட்டில் குறிப்பாகக் கொங்கு வேளாளரிடையே புலவர்களுக்கு உள்ள மரியாதை தமிழகத்தில் வேறு பகுதிகளில் இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

புலவர்கள் செந்தமிழ்ப்பு பாக்களால் ஈர்க்கப்பட்ட கொங்கு வேளாளப் பெருமக்கள் புலவர்கட்கு அடிமைச் சாசனம் எழுதித் தந்தனர். புலவர்களின் பல்லக்குகளைச் சுமந்தனர். புலவர்களின் எச்சில் காளாஞ்சிச ஏந்தினர். அவர்களின் பாதச் சம்மாளிகளைச் (செருப்பு) சுமந்தனர். சந்திர சூரியர் உள்ளவரை நானும் எம் குடும்பத்தாலும் புலவர்கட்குக் குற்றேவல் செய்வோம் என்று பட்டயம் எழுதித் தந்தனர் சிலர்.

சோழர்களின் காலத்தில் கொங்கு 24 நாடுகட்கும் புலவர்கள் நியமிக்கப்பட்டனர். இடையில் நாட்டுப் புலவர்கள் வழக்கம் நின்றுவிடவே விசயநகர அரசர்கள் காலத்தில் மீண்டும் பரம்பரை புலவர்கள் நியமிக்கப்பட்டனர். இதனைக் கொங்குப் புலவர் பட்டயம் விரிவாகக் கூறுகிறது.

தங்கள் நாட்டுக்கென்று தனியாகப் புலவர்களை நியமித்துக் கொண்ட வழக்கம் காங்கய நாட்டவர்கட்கு உண்டு. காங்கய நாட்டுக்குச் செங்குந்த கோத்திரம் போக்கங்கூட்டம் நஞ்சராயப் புலவன், கம்பருக்குக் கையேட்டுக்கார உவச்சன், பாலிடையன், தொழுவன், வேதியன், சேரகுல வேளாளன், மங்கலன், வணியன், சேணியன், விருவம்படிக்காரன், பச்சை மலையாளன் ஆகிய சமூகத்தார் பலர் புலவர்களாக விளங்கினர்.

ஒருமுறை காங்கய நாட்டார் கூடித் தங்களுக்குப் பால் சாப்பிடும் பழனிமலைப் புலவனைத் தங்கள் நாட்டுப் புலவராக நியமனம் செய்தனர். பால் சாப்பிடும் புலவர் என்ற தொடர் மிகவும் விசேடமானதாகும்.

புலவர்கள் கொங்கு வேளாளர்கள் இல்லங்களுக்கு வந்தால் விருந்திட்டு இறுதியில் வேளாளர்கள் தாம் உண்ணும் வெண்கல

வட்டிலில் நிறைப் பசும்பாலை ஊற்றிப் பழம்போட்டுப் பிசைந்து முக்காலிமேல் வைத்து சாப்பிடுமாறு செய்வர். அதனால் கொங்குநாட்டுப் புலவர்களுக்கு பால் சாப்பிடும் புலவர்கள் என்று பெயர் ஏற்பட்டது.

திருமண வீடுகளில் நடைபெறும் முக்கியமான சடங்குகளில் புலவர்கள் உள்ளிட்ட கலைஞர் சிலரை முன்னர் நடக்கச் செய்து அச்சடங்குகளைச் செய்வர். அதனை மங்கல வாழ்த்து.

"பட்டன் புலவன் பண்பாடி தக்கைகொட்டி

திட்டமாய்ச் சோபனம் செப்பிமுன் னேவர்"

என்று கூறுகிறது. திருமணச் சடங்குகளில் இறுதியானது புலவர்கள் பால் சாப்பிடும் சடங்கேயாகும். புலவர்கள் பால் சாப்பிடாத வீடுகளை மிகவும் இழிவானதாகக் கருதுவர்.

இல்லங்களுக்கு வந்த புலவருக்கு மூன்று வேட்டிகள் அளிப்பர் ஒன்று தலைக்கு உருமாலையாக, மற்றொன்று தோளுக்குத் துண்டாக, மூன்றாவது இடுப்பு வேட்டி, தாராளமாகப் பொருளும் (வர்த்தனை) வழங்குவர். அறுவடை காலத்தில் தானியம் அடிக்கும் களத்திலேயே புலவருக்குத் தானியங்களை அளப்பர்.

இவ்வளவு சிறப்புகளுக்கெல்லாம் காரணமான கொங்கு வேளாளர்களிடம் வலக்கை நீட்டிப் பரிசில் வாங்கிய புலவர்கள் மற்ற வள்ளல்கள் யாராக இருப்பினும இடக்கையை நீட்டியே பரிசில் வழங்குவார்கள்.

காங்கயநாட்டு ஊர்களுக்குச் செங்குந்த கோத்திரம் போக்கங் கூட்டம் நஞ்சராயப்புலவன், கம்பருக்கு கையேட்டுக்கார உகச்சன், பாலிடையன், தொளுவன், வேதியன், சேரகுலவேளாளன், மங்கன், வணிகன், சோழியன், திருவம்படிகாரன், பச்சை மலையாளன் இவர்கள் புலவர்களாக விளங்கினர். பால்குடிக்கும் புலவர்கட்கு வர்த்தனைக்கு உள்ள பணம் கொடுக்கவேண்டும் என்று கொங்கு புலவர் பட்டயத்தில் எழுதப்பட்டுள்ளது. மூத்தூருக்கும் இவர்கள் மரபினர் பரம்பரைக் காணிப்புலவராக இருந்திருத்தல் வேண்டும்.

# கொங்குசீர்கள்

பகுத்தறிவுவாதிகள் சீர்களை மூடநம்பிக்கைகள் என்றும், மாறிவரும் காலத்திற்கு பொருந்தாதவைகள் என்றும், அவைகளைத் தூக்கி எறிந்துவிட்டு புதுமை மிளிர வாழப் பழகிக்கொள்ளவேண்டும் என்றும் அறிவுரை கூறி வருகிறார்கள். சீர் என்பது சிறப்பு, பெருமை, உயர்வு என்றும் அர்த்தத்தைத் தரும் சொல்லாகும். அருமை என்பதும் சீர் என்பதும், பெருமை பாராட்டி நடத்தப்படும் சடங்காகும். அருமைக்காரி, சீர்க்காரி என்னும் இரட்டைச் சொற்கள் கொங்கு இருபத்து நான்கு நாடுகளிலும் வழக்கில் உள்ளன. வேளாள நாகரீகத்தில், பெண்ணைக் கொடையாக அளித்துப் பெண்ணைக் கொடையாக ஏற்பது மரபாகும். மரபு என்பது என்ன? ஆயிரம் அல்லது இரண்டாயிரம் அல்லது பத்தாயிரம் ஆண்டுகாலமாக அதாவது மிகப் பழங்காலமுதல் கைக்கொண்டு வாழ்ந்துவரும் பழக்கத்திற்கு மரபு எனப்பெயர். பெண் கொடுத்தோம், கொண்டோம் என்ற சொற்கள் மரபு வழிச்சொற்கள். பெரியோர்களால் நடத்திவைக்கப்படுகின்ற திருமண விழாவில், பெரியோர்கள் விருப்பப்படி தலைமுறை தலைமுறையாகக் கடைபிடித்த சீர்களை - சடங்காக நடத்தி வருகின்றார்கள். நாகரீகமாகப் போற்றி வந்திருக்கின்றார்கள்.

"நிறைநாழி என்பது ஒரு சீர். மணமக்களுக்கு நிறைவான வாழ்க்கை அருள, அமைய அடையாளமாக நெல் அல்லது அரிசி நிறைத்து படியை அல்லது வள்ளத்தை அடையாளமாக வைப்பர். நாழி என்பது பழங்காலத்தில் சோழ நாட்டில் வழக்கில் இருந்த முகத்தல் அளவையாகும். நிறைநாழி என்பது நாம் சோழ நாட்டிலிருந்து கொங்கு நாட்டிற்கு வந்தவர்கள் என்பதைக் குறிக்கும். கொங்கு நாட்டில் படி, வள்ளம், மிடா என்பவைகளே முகத்தல் அளவைகளாகும். மங்கலமான திருமண நாளில், நிறைந்த (சகல நலன்களும் நிறைந்த) இல்லறமாகிய நல்லற வாழ்க்கையை குறிக்கும் அடையாளம் தான் இந்த நிறைநாழி சீர்.

பெரியன் குலத்துப் பெண்களுக்குத் திருமணத்திற்கு முன்பு பொன் ஊஞ்சல் சீர் நடைபெறும். பொன் ஊஞ்சல் சீரினால் என்ன லாபம்? எல்லோராலும் செலவு செய்து இந்தச் சீர் செய்ய முடியுமா? கரிகால் சோழன், பெரியன் குலத்துப் பெண்களுக்கு பொன் ஊஞ்சல் ஆடும் உரிமையை வழங்கினான். எனவே, பொன் ஊஞ்சல் ஆடி சீர் செய்து கொள்ளும் பெரியன் குலத்துப் பெண்களுக்கு இது குலப்பெருமையை நிலைநாட்டும் நல்ல நினைவுகளை உண்டாக்கும். குலப்பெருமையைக் கட்டிக்காத்து வளர்த்து, மணியாக வாழ இச்சீர் நினைவு கூறும்.

நாட்டுக்கல் சீர் என்பது நமது கொங்கு 24 நாடுகளலும் வாழ்ந்து வரும் கொங்கு சமுதாயத்திற்கு வணக்கம் செலுத்தி, திருமணவிழா நடைபெறுகிறது என்று அர்த்தம். நாட்டுவழிபாடு என்பது நல்ல நாகரிக நயத்திற்கு அடையாளம். நல்ல நாகரிக இயல்புகளைப் போற்றி வளர்ப்பது கொங்கு சமுதாய வளர்ச்சிக்கு வலிமையூட்டும் புலவருக்குப் பால் பழம் கொடுத்துக் கல்யாணப்பணம் கொடுக்கும் சீர் தமிழ் வரலாற்றுடன் உறவு கொண்ட சம்பவத்தைச் சுட்டும் சீராகும். நம் முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில், காவிரி பெருக்கெடுத்து ஓடி வெள்ளத்தினால் தென்கரை நாட்டு ஊர்கள் அழிந்தன. இப்பகுதியில் காவிரி நதி அகலமாக ஆழம் குறைவாக ஓடுகின்றது. கவிச்சக்கரவர்த்தி கம்பர் கவிபாடி வெள்ளக் கொடுமையைத் தணித்தார். மகாகவி கம்பருக்குக் கைமாறாக கொங்கு 24 நாடுகளிலும் புலவர்களுக்கு பால் பழத்துடன் வதுவைப் பணம் செலுத்தப்பட்டு வருகின்றது. இது குறித்த பழம் பாடல்களும், பட்டையங்களும் கொங்கு 24 நாடுகளிலும் கிடைத்துள்ளன. எனவே மேற்படி சீரை தமிழுக்கு நம்மவர் செலுத்திய காணிக்கையாகக் கருதலாம்.

கொங்கு நாட்டில் பத்தினிப் பெண்களை வணங்கிப் போற்றும் பல சீர்களில் குறிப்பிடத்தக்கவை புடவை நோன்பு, படைக்கலச்சீர், குதிரை பிடித்தல், வீரமாத்தி அல்லது வீரநாச்சி எனப் பல்வேறு பெயர்களில் கொங்கு 24 நாடுகளிலும் கொண்டாடப்படுபவையாம். அந்த அந்தக் குலத்தில், கணவன் இறந்ததும், கணவனுடன் தீயில் இறங்கி, உயிர் தியாகம் செய்த கற்புக்கரசிகளுக்கு ஆண்டுதோறும்

சடங்கு செய்து மரியாதை செலுத்துவர். எந்த நிறமான புடவை அணிந்து தீக்குளித்தார்களோ அதே நிறமான புடவையை வைத்துச் சடங்கு செய்வர். சிலர் மங்கலப் பொருளாளன கண்ணாடியை வைத்துச் சீர் செய்வர். படைக்கலம், குதிரை பிடித்தல் என்பன இரண்டு குதிரை, மூன்று குதிரை, ஒரு படைக்கலம், இரண்டு படைக்கலம் என்று எண்ணிக்கைகளால் குறிக்கப்படுவன. ஒரு குலத்தில் இரு பெண்கள் தீப்பாய்ந்து உயிர்நீத்தால் இரு படைக்கலம், இருகுதிரை என்பார்கள். குதிரை என்பது என்ன? கணவனுடன் தீப்பாயும் பத்தினிப்பெண் மணப்பெண்ணைப் போல் அலங்காரம் செய்து குதிரையில் சவாரி வந்து தீக்குளித்த பழைய வரலாற்றினை குறிப்பதாகும். வீரமாத்தி என்ற சொல், புகழ் உடம்பிற்காகப் பூத உடம்பை மாற்றிக் கொண்டவள் என்பதைக் குறிப்பதாகும். மாற்றிக்கொண்டவள் என்பது பேச்சு வழக்கில் மாத்தி என வழங்கிவருகின்றது. சுருங்கக்கூறினால், பத்தினிப்பெண்டிர் வழிபாடுஇது எனக்கூறலாம். நம் முன்னோர்களின் தியாகச்சிறப்பினை நாம் கொண்டாடுவது நம் நாகரிக மேன்மையைக் குறிக்கும்.

திருமண நிச்சியதார்த்தத்தில் "உப்பு வாங்குதல்" அல்லது "உப்பு மாற்றுதல்" ஒரு முக்கியமான சடங்காகும். மாப்பிள்ளை வீட்டார் உப்பில் இருந்து ஒரு கையை அள்ளி பெண் வீட்டார் உப்பில் இட்டும், பெண் வீட்டார் உப்பில் சிறிது எடுத்து மாப்பிள்ளை வீட்டு உப்பில் கலந்தும் வைப்பர். இருவீட்டு உப்புக்களும் பிரித்தறிய முடியாதவாறு இரண்டறக்கலந்தது போல் மணமக்கள் கருத்தொருமித்து வாழவேண்டும் என்றும், இருவீட்டார்களின் உறவும் ஒன்றென வேறுபாடில்லாது விளங்கி வளரவேண்டும் என்பதையும் இது நினைவுபடுத்தும் சடங்காகும். எதற்காக உப்பு? ஏன் சர்க்கரையோ, பழங்களையோ மாற்றிக் கொள்ளக்கூடாது? "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" - இது உப்பின் உயர்வைச் சொல்லும் பழமொழி. சர்க்கரையோ பழங்களோ இல்லாமல் பல நாட்கள் வாழ்ந்து காட்ட முடியும். ஆனால் உப்பில்லாமல் ஒரு வேளையைக் கூடத் தள்ள முடியாது. எனவே தான் ஏழை, பணக்காரன், உயர்ந்தவன்,

தாழ்ந்தவன், படித்தவன், படிக்காதவன் என்று பாகுபடுத்தாமல் அவைரின் வாழ்விலும் அங்கம் வகிக்கும் உப்பை மாற்றிக் கொள்கிறோம். அதுமட்டுமல்லாது "உப்பிட்டவரை உள்ளவும் நினை" என்பதற்கிணங்க மணமகள் தனக்கு உப்பு அள்ளித்தந்த மணமகனைத் தன் வாழ்நாள் உள்ளளவும் நினைத்து, உப்பைப் போல் அனைவரின் வாழ்விலும் ருசியைக் கூட்டி நிறைந்த வாழ்வு வாழவேண்டும் என்பதை இது குறிக்கும்.

"கங்கணம்" என்று சொல்லப்படும் காப்புக்கயிறு மணமக்களை தீயசக்திகளிடமிருந்து காத்து நல்ல முறையில் திருமணம் இனிதே முடிய உதவியாக விளங்குவது, இணைச்சீர் என்பது மணமகனுடன் இணையாகப் பிறந்தவள், அதாவது சகோதரி செய்யும் சீர். "எங்களுடன் இணையாகப் பிறந்த நீ இன்று வாழ்க்கைத் துணையுடன் இணையப்போகின்றாய். எல்லாநலன்களும் பெற்று வாழ்க!" என வாழ்த்துமுகமாக அமைந்த சீர் இணைச்சீர். ஒருசந்திச் சாப்பாடு அல்லது பட்டினிச்சாப்பாடு என்பது திருமணத்திற்கு முன்பு மணமக்களுக்கு தனித்தனியாக அவரவர் வீட்டில் மாமன்மாரால் நடத்திவைக்கப்படுவதாகும். காலை முதல் பட்டினி இருந்து மாலை வேளை மட்டும் (ஒரு சந்தி) உணவு உண்ணவேண்டும். மணமகனுக்கு "உருமாலை" கட்டியும், மணமகளுக்கு "மிஞ்சி" போட்டும் சடங்குகள் செய்வர். இது மணமக்கள் திருமணத்திற்கு தயார் என்பதை ஊரார்க்கு அறிவிக்கும் நிகழ்ச்சியாகும். அது மட்டும் அல்லாது இல்ல வாழ்வில் எப்போதேனும் வறுமையினால் பட்டினிகிடக்க நேர்ந்தால், அதுபோழ்து மனத்திண்மையுடன் இருந்து பசியை வென்று நேர்வாழ்வு வாழ மணமக்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சியும் ஆகும்.

மணமகளுக்கு அருமைக்காரர் தாலிகட்டும் சடங்கு இருந்தது. மணமகன் மகயோடு அருமைக்காரரும் சேர்ந்து தாலிகட்ட உதவினார். என்பதே இதன் கருத்தாகும். மணப்பெண் தாலி கட்டியவனுக்குத்தான் உரியவள் என்ற கருத்து எழுந்தபின் அந்த நிலைமாறியது. அருமைப் பெரியவர் தாலியை எடுத்துக்கொடுக்க மணமகன் கட்டுதல் என்ற வழக்கமே நிலைத்து வருகின்றது. மணமகன் நாணத்தாலோ, மாங்கல்யம் நழுவி விழுந்து விட்டால் அது அபசகுணமாகும். அதற்கு எச்சரிக்கையாகத்தான் அருமைக்காரர் உதவுவார். தற்போதெல்லாம் பெண்ணின் தோழியர் இதற்கு உதவி செய்வர்.

தாலிகட்டும் சடங்கு சங்க காலத்திலேயே இருந்தது. சிலம்பில் கண்ணகியும் தாலி அணிந்தாள். குறுந்தொகையிலும், புறநானூற்றிலும் சான்றுகள் உள்ளன. " எகை அரிய இழை அணி மகளிரொடு" (புறம் – 127 – 5), "புலிப்பல் தாலிப் புன் தலைச்சிறாஅர், மான்கண் மகளிர்" (புறம் – 374 – 9 – 10) இழையணி என்பது தாலிதான். வீரத்திற்கு அறிகுறியாக புலிப்பால் தாலி பெண்ணின் கற்பிக்கு வேலியாகும். நிறை காக்கும் காப்பிற்கு அடையாளமாக இது விளங்கும். இதனால் பிற ஆடவர் காமப்பார்வை பெண்ணின் மீது மேயாது எனலாம். மங்கல அணியாக மாங்கல்யம் விளங்கும். மணமகனின் நினைவுக்கட்டுக்குள் மணமகள் இருக்கிறாள் என்பதன் அறிகுறிதான் தாலி கட்டுதல்.

"நல்ல கணபதியை நாளும் தொழுதாலே
அல்லல் வினையெல்லாம் மாளுமே – சொல்லரிய
தும்பிக்கை யோனைத் தொழுதால் வினைதீரும்
நம்பிக்கை யுண்டே நமக்கு " (காப்பு வெண்பா)

(அகவல்)

அலைகடல் அமிழ்தம் ஆரணப் பெரியவர்
திங்கள் மும்மாரி செல்வம் சிறந்திட
கந்தன் இந்திரன் கரிமா முகத்தோன்
சந்திரர் சூரியர் தானவர் வானவர்
முந்திய தேவர் மூவருங் காத்திட
நற்கலி யாணம் நடந்திடும் சீர்தனில்
தப்பித மில்லாமல் சரஸ்வதி காப்பாய்!
சீரிய தினைமா தேனுடன் கனிமா
பாரிய கதலிப் பழமுடனே இளநீர்

சர்க்கரை வெல்லம் தனிப்பலாச் சுளையும்
மிக்கதோர் கரும்பு விதவிதக் கிழங்கு
எள் அவல் நற்பொரி இனித்தபா குடனே
பொங்கல் சாதம் பொரிகறி முதலாய்
செங்கை யினாலே திரட்டிப் பிசைந்து
ஆராமுது அருந்தும் அழகு சிறந்த
பேழை வயிற்றுப் பிள்ளை கணபதியே

அடியேன் சொல்லை அவனியில் குறித்துக்
கடுகியே வந்தென் கருத்தினில் நின்று
நினைத்த தெல்லாம் நீயே முடித்து

மனத்துயர் தீர்ப்பாய் மதகரி சரணம் !
மங்கல வாழ்த்தை மகிழ்ந்து ஓத
என்குரு நாதன் இணையடி போற்றி
கிரேதா திரேதா துவாபரம் கலியுகம்
செம்பொன் மகுடம் சேரன் சோழன்
பைம்பொன் முடியும் பாண்டியன் என்னும்
மூன்று மன்னர் நாட்டை ஆளுகையில்
கருவுரு வாகித் திருவதி அவள்புகழ்
நிறைந்த மானிடம் தாயது கருப்பம்
வாழ்வது பொருந்தி வளமாய் நலமாய்

செம்மை யுடனே சிறந்திடுங் காலம்
இந்திரன் தன்னால் இங்குவந்த நாளில்
பக்குவ மாகிப் பருவங் கண்டு
திக்கில் உள்ளோர் சிலருங் கூடி
வேதியன் பக்கம் விரைவுடன் சென்று
சோதிடரை அழைத்துச் சாத்திரங் கேட்டு
இந்தமாப் பிள்ளை பேர்தனைக் கூறி
இந்தப் பொண்ணின் பேர்தனைச் சொல்லி
இருவர் பேரையும் ராசியில் கேட்டுக்
கையில் ஓடிய ரேகைப் பொருத்தம்

நாற்பத்தொன்பது பொருத்தம் உண்டெனப் பார்த்துத்
தாலிப் பொருத்தம் தவறாமல் கேட்டு
வாசல் கௌலி வலிதென நிமித்தம்
தெளிவுடன் கேட்டுச் சிறியோர் பெரியோர்
குறிப்புச் சொல்லும் குறிப்பையும் கேட்டு
உத்தம பாக்கியம் தச்சனைக் கேட்டு
பொருந்தி இருத்தலால் பூரித்து மகிழ்ந்து
சிலபே ருடனே சீக்கிரம் புறப்பட்டு
மச்சினன் ஊருக்கு வண்டியில் சென்று
வெண்கல முரசு வீதியில் கொட்ட

தங்க நகரி தானலங் கரித்து
முத்து தன்னை முசம்பரங் கொட்டி
சித்திரக் கூடம் சிறக்கவே விளக்கி
உரியவர் வந்தார் உன்மகளுக் கென்றே
பிரிய முடன் வெற்றிலை மடிதனில்கட்டி
நாளது குறித்து நல்விருந்து துண்டு
பூட்டு தாலிக்குப் பொன்னது கொடுத்து
வாழ்வது மனைக்கு மனமகிழ வந்துமே
கற்றோர் புலவர் கணக்கரை அழைத்து
தேன்பனை யோலை சிறக்கவே வாரி

கும் தெசதிசை எங்கும் தென்னவர் அனுப்பி
ளக் கலியாண நாளைக் கணித்து அறிவித்தார்
கமே முழை கமுகு மகமே ருடனே
யால் லேலை இலையால் தோரணங் கட்டி
மொழுதோர் வந்து மொழுகி வழித்துப்
ங்கும் க்குமிட மெங்கும் வதால்தனைத் தெளித்து
ழங்கும்ண்டுகள் வழங்கும் பெரிய கலத்தைக்
தனைச்ண்டு வந்ததனைக் குணமுடன் விளக்கி
ரிசியைய சம்பா அரிசியை நிறைத்துப்
பாக்கிய வெல்லம் பாக்கு வெற்றிலை

ம் தேங்டன் நெய்யும் தேங்காய் பழமும்
வரிஙியே வைத்து வரிசை குறையாமல்
முக்கறமை யதாக முக்காலிமேல் வைத்து
திய மாம் பொருந்திய மாப்பிள்ளை தனக்குச்
திய குளம் பொருந்திய குடிமகன் அழைத்து
கமது சன மச்சம் முகமது துடைத்து
லுக்கு லான கூந்தலுக்கு எண்ணெய் தனையிட்டு
க்காய் களமது சிகைக்காய் கூந்தலில் தேய்த்துமே
ன்பமுட தீர்த்தம் இன்பமுடன் விட்டு
விளாவிழ முடனே விளாவியே வார்த்து

றால் சீக்நெற் சோற்றால் சீக்கினை கழித்து
வத்திரணப் பட்டு வத்திரந் தன்னை
து நேர்ங்கக் கொய்து நேர்த்தியாய் உடுத்தி !
பழம் ஆனமும் முப்பழம் ஆவின் பாலும்
னே வந்னவர் முன்னே வந்தவ ருடனே
திப்புடஸ் கிளரி மதிப்புடன் கூட்டி

டு தனைங் கொண்டு தரைதனை மெழுகி
க் கருந்தி ஒன்றைக் கருத்துடன் நாட்டி
ருள்பொகது சூடி அருள்பொருந் திடவே
நிறைநிய தாகவே நிறைநாழி வைத்து

மும் விற்றிலை பழமும் விருப்புடன் வைத்து
ழ்தம் அகடல் அமிழ்தம் அவனியில் நீரும்
ணம் குிக்குக் கங்கணம் குணமுடன் தரித்து
சிடக் கரியோர் மெச்சிடக் காப்பது கட்டி
க் குலரேரி கொட்டிக் குலதேவதை அழைத்து
னவர்க்முடன் மன்னவர்க்குத் திருநீறு அணிந்து
ான்பன் சந்தனம் தான்பன் னீரும்
ச் சிறக்கதுக் கலக்கிச் சிறக்கவே பூசி
டிய ரளந்த ரளி கொடிய ரளி கோத்திரத்து நல்லரளி
ச்சி முலை இருவாச்சி முனைமுறியாச் செண்பகப்பூ

நாருங் கொழுந்தும் நந்தியா வட்டமும்
வேருங் கொழுந்தும் வில்வ பத்திரமும்
மருவும் மரிக்கொழுந்தும் வாடாத புட்பங்களும்
புன்னை கொன்னை பூக்கள் எல்லாம் கொண்டு வந்து
தண்டைமாலை கொண்டை மாலை சோபன மாலை
சுடர்மாலை ஆடை ஆபரணம் அலங்காரம்
திடமாய் மிகச்செய்து திட்டமுடன் பேழைதனில்
சோறு நிறையுடன் சேரநாழி வைத்து
நட்டுமுட்டுத் தான்முழங்க நாட்டார் சபைதனக்கு

நன்றாய் வலம்வந்து நலமதாய் நிற்கையிலே
செஞ்சோறு ஐந்து அடை சிரமதைச் சுற்றி
திருஷ்டி கழித்துச் சிவசூரியனைக் கைதொழுது
அட்டியெங்கும் செய்யாமல் அழகு மனைக்குவந்து
மணவறை அலங்கரித்து மன்னவரைத் தானமர்த்தி
இணையான தங்கையரை ஏந்திழையைத் தான ழைத்து
சந்தனம் புனுகு சவ்வாது மிகப்பூசி
மந்தாரை மல்லிகை மருக்கொழுந்து மாலையிட்டு
ஆடை ஆபரணம் அழகுறத் தான்பூண்டு
கூறை மடித்துவைத்துக் குணமுள்ள தங்கையரும்

பேழைமுடி தான்சுமந்து பிறந்தவரைச் சுற்றிவந்து
பேழையை இறக்கிவைத்துப் பிறந்தவளை அதில்நிறுத்தி
கூறைச்சேலை ஒருதலைப்பை கொப்பனையால் கைப்பிடித்து
மாப்பிள்ளை கக்கத்தில் மறுமுனை தான்கொடுத்து
அருமைப் பெரியார் அழகு மாப்பிள்ளைகையை
அரிசியில் பதியவைத்து அங்கரன் பூசைசெய்து
மங்கல வாழ்த்துக்கூற மணவறையில் குடிமகனுக்கு
செங்கையால் அரிசியள்ளி சிறக்கக் கொடுத்திடுவார் !
குடிமகன் மங்கல வாழி கூறிமுடித்தவுடன்
வேழமுகத்து விநாயகரின் தாள் பணிந்து

சந்திரரும் சூரியரும் சபையோர்கள் தானறிய
இந்திரனார் தங்கை இணையோங்க வந்தபின்பு
அடைக்காயும் வெற்றிலையும் அடிமடியிற் கட்டியபின்
முன்னர் ஒருமுறை விநாயகருக்கு இணைநோக்கி
பின்னர் ஒருமுறை பிறந்தவர்க்கு இணைநோக்கி
இந்திரனார் தங்கைக்கு இணைநோக்கி நின்றபின்பு
தேங்காய் முகூர்த்தமிட்டுச் செல்வ விநாயகனைப்
பாங்காய்க் கைதொழுது பாரிகொள்ளப் போறோமென்று
மாதா வுடனே மகனாரும் வந்திறங்கி
போதவே பால்வார்த்துப் போசனமும் தானருந்தி

தாயாருடன் பாதம் தலைகுனிந்து தொண்டனிடப்
போய்வாமகனே என்றாள் பூங்கொடிக்கு மாலையிடப்
பயணமன்று முரசுகொட்டப் பாரிலுள்ள மன்னவர்கள்

மதகரி அலங்கரித்து மன்னவர்கள் ஏறிவர
தந்தை யானவர் தண்டிகை மேல்வர
தமையன் ஆனவர் யானையின் மேல்வர
நாடியே வந்தவர்கள் நட்சத்திரம் போலவர
தேடியே வந்தவர்கள் நட்சத்திரம் போலவரை
பேரணி முழங்க பெரிய நகாரடிக்க
பூமிதான் அதிர புல்லாங்குழல் ஊத

எக்காளஞ் சின்னம் இடிமுரசு பெரிய மேளம்
கைத்தாளப் பம்பை கனகதப்பட்டைதான் முழங்க
துத்தாரி நாதசுரம் சோடிகொம்பு தானூத
சேகண்டி சங்கு நிமிர்த்தானை பம்பையுமே
வலம்புரிச் சங்கு வகையால் ஊதிவர
உருமேளம் சங்கு வகையாய் ஊதிவர
உருமேளம் பறைமேளம் உரம்பை திடும்படிக்க
பலபல விதமான பக்கவாத்தியம் முழங்க
பல்லாக்கு முன்னடக்கப் பரிசுகள் பறந்துவர
வெள்ளைக்குடை வெண்சாமரம் வீதியில் வீசிவர
சுருட்டிய சூரியவாளம் தீவட்டி முன்னடக்க

இடக்கை வலக்கை இனத்தார்கள் சூழ்ந்துவர
குதிரையின் மீதமர்ந்து குணமுள்ள மாப்பிள்ளைதான்
சேனைகள் முன்னே சிறந்து முன்னடக்க
கட்டியங்கள் கூறி கலிவாணர் பாடிவர
நாட்டியங்கள் ஆடி வந்தாள் நல்ல தேவடியாள்
பாகமாஞ்சீ லைப்பந்தம் பிடித்திட
மேகவண்ணச் சேலை மின்னல்போல் மின்ன
அடியார் ஆயிரம்பேர் ஆலத்தி ஏந்திவர
பெண் வீட்டார்கள் பிரியமுடன் எதிர்வந்து
மன்னவர் தங்களை வாருங்கள் என்றழைத்து

வெகு சனத்துடனே விடுதியில் விட்டு வந்தார்
வாழ்வரசி மங்கைக்கு வரிசை அனுப்புவோம் என்று
நாழியரிசிக் கூடை நன்றாக முன் அனுப்பி
பொன்பூட்டப் போகிறவர் பேடை மயிலிறகு
நல்ல முகூர்த்தம் நலமுடன் தான்பார்த்து
பெட்டிகளும் பேழைகளும் பொன்னும் சீப்பும்
பட்டுத்துணி நகையும் பார்க்கக் கண்ணாடியும்
சாந்துச் சரப்பணி தங்கம்பொன் வெள்ளிநகை
முத்துச் சரப்பணி மோகன மாலைகளும்
திட்டமுடன் மங்கையர்க்குத் திருப்பூட்டப் போவோம் என்று

அட்டதி க்கும் தானதிர அடியுமென்றார் பேரிகையை

அன்னநடையாரும் அருமைப் பெரியவரும்
பொன்வளையல் கையால் பேழைமுடி தான்சுமந்து
இன்னும் சிலபெண்கள் இவர்களையே சூழ்ந்துவர
சென்று உட்புகுந்தார் திரு ப்பெண்ணாள் மாளிகையில்
நாட்டில் உள்ள சீர் சிறப்பு
நாங்கள் கொண்டு வந்தோம் என்று
கொண்டுவந்த அணிகலனைக் கோதையருக்கு முன்வைக்க
கண்டு மகிழ்தார்கள் கன்னியர்கள் எல்லோரும்
பூட்டினர் தோடெடுத்து பொன்னாள் திருக்காதில்

தங்கச் சங்கிலிதனை தாக்கழுத்தில் இட்டார்கள்
அடைக்காயும் வெற்றிலையும் அன்பாக மடியில்கட்டி
ஆணிப்பெண்ணவளை அலங்கரித்துக் குலம் கோதி
சாந்துப்பொட்டிட்டு சவ்வாது மிகப்பூசி
ஊட்டுமென்றார் சாதம் உடுத்துமென்றார் பட்டாடை
பொன்பூட்ட வந்தவர்க்குப் பூதக்கலம் தான்படைத்து
அன்பாக வெற்றிலை அடைக்காயும் தான்கொடுத்தார்
தாய்மாமன் தன்னை தண்மையுடனே அழைத்து
சந்தனம் மிகப்பூசி சரிகைவேட்டி தான்கொடுத்துப்

பொட்டிட்டு பொன்முடித்து பேடைமயிலிக்குப்
பட்டமும் கட்டினார் பாரிலுள்ளோர் தானறிய
ஆரணங்குப் பெண்ணை அலங்காரம் மிகச்செய்து
மாமன் குடைபிடித்து மாநாட்டார் சபைக்கு வந்து
வலமதாய் வந்து நலமதாய் நின்று
செஞ்சோறு ஐந்துஅடை சிரம்கால் தோளில்வைத்து
நிறைநாழி சுற்றியே நீக்கி தீட்டிகழித்து
அட்டியங்கள் செய்யாமல் அழகு மனைக்குவந்து
மங்கல கல்யாணம் செய்ய மணவறை அலங்கரித்து
அத்தி எருத்திப்பட்டு அனந்தநாராயணப் பட்டு

பஞ்சவண்ணநிறச்சோலை பவளவண்ணக் கண்டாங்கி
மாந்துளிர்சேர் பூங்கொத்து வண்ணமுள்ள பட்டாடை
மேலான வெள்ளைப்பட்டு மேற்கட்டுங் கட்டி
கட்டியே இருக்கும் கணப்பெரிய வாசலிலே
அருமையுள்ள வாசலிலே அனைவோரும் வந்திறங்கிப்
பெருமையுள்ள வாசல்தனைப் பூவால் அலங்கரித்து
சேரசோழ ராசாக்கள் சேர்ந்திருக்கும் வாசலிலே
வீர இலக்குமி விளங்கிடும் வாசலிலே
விருதுகள் வழங்கிடும் வளமான வாசலிலே

தாணியின் அன்னக்கொடி தழைத்திருக்கும் வாசலிலே
பன்னீராயிரம்பேர் பலர் சேர்ந்த வாசலிலே
நாற்கரசுக நாட்டி நல்லமுகூர்த்த மிட்டுப்
பேய்க்கரும்பை நாட்டிப் பிறைமண்ணும் தான்போட்டு
சாலுங் கரகமும் சந்திர சூரியரும்
அம்மி வலமாக அரசாணி முன்பாக

ஆயிரப் பெருந்திரி அதுவும் வலமாக
தேங்குடன் கலம்விளக்கிச் சோற ரிசி பால்பழமும்
பத்தியுடன் இத்தனையும் பாரித்தார் மணவறையில்
மணவறை அலங்கரித்து மணவாளனை இருத்தி

அழகுள்ள பெண்ணை அலங்காரம் மிகச்செய்து
மாமன் எடுத்து மணவறையைக் சுற்றிவந்து
விழுச்சியது மீதுற வலதுபுறம் தானிருத்தி
குலம்பெரிய மன்னவர்கள் குவலயத்தார் சூழ்ந்திருக்க
இராமன் இவரோ இலக்குமணன் இவரோ
கண்ணன் இந்திரன் காமன் இவரோ
அத்தை மகள்தனை அழகுச் செல்வியை
முத்து ரத்தினத்தை முக்காலிமேல் அமர்த்தி
கணபதி முன்பாக கட்டும்மங்கலியம் வைத்து
அருமைப் பெரியவர் அன்புடன் பூசைசெய்து

மாப்பிள்ளை பெண்ணை மணவறையில் எதிர்நிறுத்தி
கெட்டிமேளம் சங்குநாதம் கிடுகிடென்று சப்திக்க
மாணிக்கம்போல் மாங்கல்யம் வைடூரியம்போல் திருப்பூட்டி
ஆரம்தனை மாற்றி அமர்ந்தபின் மணவறையில்
மாப்பிள்ளைக்கு மைத்துனரை வாவென்று தானழைத்து
குலம்பெரிய அரிதனில் கைகோர்வை தானுமிட்டு
சிங்காரமான இந்தத் தெய்வச் சபைதனிலே
கங்காகுலம் விளக்கக் கம்பர்சொன்ன வாழ்த்துரையை
மங்கலமும் கன்னிசொல்ல வாத்தியம்எல்லாம் அடக்கி
மறையோர் வேதம்சொல்ல மற்றவர் ஆசிகூற

பிறைஆயிரம் தொழுது பிள்ளையாருக்குப் பூசைசெய்து
அருமைப் பெரியோர் அருகுமணம் செய்தபின்பு
கைக்குக் கட்டின கங்கணமும் தானவிழ்த்து
தங்களுக்குத் தாங்கள் தாரைக்கோர் பொன்கொடுத்து
உரியோர்தோர் பாட்டன் இருவருடை கைதனிலே
தண்ணீர் ஊற்றியே தாரையும் வார்த்தபின்பு
பிரியமுள்ள மணவறையைப் பின்னும் சுற்றிவந்து
மங்கலக் கல்யாணம் வகையாய் முடிந்ததென்று
செங்கையினாலே சிகப்பிட்டு இருவருக்கும்
சாப்பாடு போசனம் சந்தோச மாய்ப்போட

உண்டுபசி யாறி உறவுமுறை எல்லோரும்
கொண்டுவந்த பொன்முடிப்பைக் கொடுத்துச் செல்லுமென்றார்
மண்டலத்தோர் எல்லோரும் மணப்பந்தலில் அமர்ந்து
கல்யாணத்தார் தம்மை கருத்துடனே அழைத்து
கண்ணாளர் தனையழைத்துப் பொன்னோட்டம் காணுமென்றார்
அப்போது கண்ணாளர் அவ்விடமே தானிருந்து
பணமது பார்த்துக் குணமது ஏற்றுளே
கல்லு வாகன் கருவூர்ப் பணமும்

வெள்ளைப் புல்லடி வேற்றூர் நாணயம்
சம்மன் கட்டி சாத்தூர் தேவன்
உரிக்காகப் பணம் உயர்ந்த தேவராயர்

ஆண்மாடை பெண்மாடை அரியதோர் பொற்காசு
ஒருவிழி விழிக்க ஒருவிழி பிதுங்க
பலவகை நாணயமும் பாங்காய்த் தெரிந்து
தொன்னூறு பொன்னு முடிப்பொன்றாய் முடிந்தவுடன்
பாட்டன் இருந்து பரியம் செலுத்தினார்
பந்தல் கௌளி பாக்கியம் உரைக்க
மச்சினன் மார்கள் மகிழ்ந்து சூழ்ந்திருக்க
சிற்றடிப் பெண்கள் சிறுசீர்கள் சுமந்துவர
சந்தோச மாகித் தங்கமுடி மன்னவர்கள்

பந்தச் செலவு பலபேர்க்கும் ஈந்தார்கள்
ஆடுவான் பாடுவான் ஆலாத்தியும் பட
நாடிவந்த பேர்களுக்கு நல்ல மனதுடனே
தேடிவந்த பேர்களுக்கு தனிப்பணம் தான்கொடுத்து
வாழிசொன்ன புலவருக்கு வரிசைதனைக் கொடுத்து
திட்டமுள்ள பந்தலின்கீழ் வந்துநின்ற பேர்களுக்கு
அரிசி அளச்தார்கள் அனைவோரும் தானறிய
கரகம் இறக்கிவைத்து, கன்னி மணவாளனுக்கும்
புடவைதனைக் கொடுத்துப் பின்னும் தலைமுழுகி
சட்டுவச் சாதம் பெண்தளிர்கையால் மாப்பிள்ளைக்கு

சாதம் பரிமாறிச் சாப்பிட்டு ஆனவுடன்
பண்ணையத்து மாதிகளைப் பண்பாகத் தானழைத்து
வில்லை மிதியடிகள் மிகவே தொட்டபின்பு
காலும் வழங்கிக் கன்னியைத் தானழைத்து
மஞ்சள் நீராட்டி மறுக்கஇரு அழைப்பழைத்து
மாமன்மார்களுக்கு மகத்தான விருந்துவைத்து
மங்கல சோபனம் வகையாய் முடிந்தவுடன்
மாமன்கொடுக்கும் வரிசைதனைக் கேளீர்
தூயபட்டுச் சால்வை சோமன் உருமாலை
பஞ்சவண்ணக் கண்டாங்கி பவளநிறப் பட்டுசேலை

அத்தியடி துத்திப்பட்டு ஆனையடிக் கண்டாங்கி
மேலான வெள்ளைப்பட்டு மேகவண்ணக் கண்டாங்கி
இந்திர வண்ணப்பட்டு ஏகாந்த நீலவண்ணம்
முறுக்கு வளையல்களும் முகமுள்ள கொலுசுகளும்
பதக்கம் சரப்பணி பகட்டான காசுமாலை
கட்டிலும் மெத்தையும் காளாங்கி தலையணையும்
வட்டில் செம்பும் கன்றுடன் பால்பசுவும்
குதிரையுடன் பல்லக்கு குறையாத பல்பண்டம்
நிறையக் கொடுத்தார்கள் நேயத்தோர் தானறிய !

# வாழ்த்துரை

ஆதி கணேசன் அன்புடனே வாழி!
வெற்றிவேல் கொண்ட வேலவனே வாழி!
எம்பெருமானின் இணையடி வாழி!
பாரத தேசம் பண்புடன் வாழி!
மாது உமையவள் மகிழ்வுடன் வாழி!
முப்பது கோடி தேவரும் வாழி!
நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகளும் வாழி!
மாப்பிள்ளை பெண்ணும் மகிழ்வுடன் வாழி!
வேதம் ஓதிடும் வேதியர் வாழி!
கொங்கு நாட்டுக் குடிகளும் வாழி!

வாழியே யானும் மகிழ்வுடன் வாழி!
என்குரு கம்பர் இணையடி வாழி!
வையத்து மக்கள் மற்றவரும் வாழி!
காராள குலதிலகர் கவுண்டர்கள் வாழி!
வேளாளர் குலதிலகர் விவசாயரும் வாழி!
இப்பாட்டுக் கேட்டவர் எல்லோரும் வாழி!
ஆல்போல் தழைதழைத்து அறுகுபோல் வேரூன்றி
மூங்கில்போல் கிளைகிளைத்து முசியாமல் வாழ்ந்திருக்க!

**“ சாமை விளையும் இடமெல்லாம் சம்பா விளைய ” கி.பி. 1282 விய வருடம் தை மாதம் 5 ஆம் நாள் காலிங்கராயன் அணை கால்வாய் வெட்டி முடித்து நாட்டுடைமை ஆக்கினார்.**

சீர்கொண்ட மேல்கரைப்பூந் துறைநன் னாட்டில்
சிறந்திலங்கும் தென்முகம்வெள் ளோடு தன்னில்
போர்கொண்ட கனகபுரம் கொங்கு வேளாண்
பெருமைமிகு சாத்தந்தை குலத்து தித்த
ஏர்கொண்ட நஞ்சையன் செல்லப் பிள்ளை
ஏற்றமுள்ள காலிங்க ராயன் அன்று
போர்க்கொண்ட பாண்டியன்நல் அமைச்சர் ஆகி
பொறுப்புடனே கொங்கதனை ஆண்டு வந்தார்

அடித்தளத்து மக்களுக்கு உரிமை தந்தார்
அகன்காடு பலஅழித்து ஊர் உண்டாக்கி
பொடிப்பொடியாய் இடிந்தபல குளங்கள் தன்னை
பொறுப்புடன் சீர் படுத்திநீர் நிறையச் செய்தார்
முடியரசன் பெயரில்புதுக் குளங்கள் தொட்டான்
முதல்தெய்வம் சிவனுக்குக் கோயில் கண்டான்
குடிமகனாம் நாவிதனின் பெயரும் கூட
குவலயத்தே நிலைத்திருக்க ஊர்ச மைத்தார்

வானிமுதல் நொய்யல்வரை புன்செய் தன்னை
வளங்கொண்ட நஞ்சையாய் மாற்று தற்கு
தானொருவர் வாய்க்காலை வெட்டி அஃது
தனக்கின்றி நாட்டுடமை ஆகச் செய்தார்
காணியூர் வெள்ளோடு விட்டு அன்று
காவடிக்கா நாடுவந்தும் தலைமை ஏற்றார்
பானிறைந்த கால்நடையின் ஊற்றுப் பக்கம்
பண்பு ஊற்றுக் குழியமைத்து ஆட்சி செய்தார்

தான் கண்ட வாய்க்காலின் தண்ணீர் தன்னை
தன்மைமிகு நெய்யலிலே கல்க்கச் செய்து
வீண்செய்ய விரும்பால் கருவூர் மட்டும்
வியன்வாய்க்கால் வெட்டுதற்குத் திட்ட மிட்டான்
பான்மடைபோல் ஓட்டைஅணை விதரி அத்திப்
பாளையத்தில் வாய்க்கால்கள் சான்று கூறும்
சேண்வாணி நொய்ய ஆன் பொருநை தன்னை
சேர்ந்திணக்கக் காலிங்கன் முயற்சி செய்தான்

# நதிகள் இணைப்புக்கு முதன்முதலில் சிந்தித்து செயல்பட்ட காலிங்கராயன்

உணவு கொடுத்தவர்கள் உயிரையே கொடுத்தவர்கள் ஆவர். உணவு எனப்படுவது நிலத்தொடு நீர் சேர்வதால் உண்டாவது. நிலத்தொடு நீர் சென்றடையும் பணியை யார் செய்கிறார்களோ அவர்களே உடம்பையும் உயிரையும் படைத்தவர்கள் ஆவர். அவர்கள் புகழே உலகில் என்றும் நிலைத்திருக்கும் !

(புறநானூற்றுப்புலவர் குடபுலவியனார்)

காலிங்கராயன் இப்புகழுக்கு உரியவன் !

ஈரோடு மாவட்டம், வெள்ளோடு கிராமத்தில் தென்முகம் வெள்ளோட்டில் உலகபுரம், கனகபுரம் தேவபுரம் என்ற மூன்று கரைப்பிரிவுகள் உண்டு. அவற்றின் காணியாளர்கள் கொங்கு வேளாளரில் சாத்தந்தை குலத்தினர்.

கனகபுரம் சாத்தந்தை குல நஞ்சையகவுண்டர் மகன் லிங்கையன் எப்பொழுதும் படிப்பதிலும், வீரவிளையாட்டுக்களிலும் ஆர்வம் கொண்டிருந்தான். கி.பி. 13 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் கொங்குச்சோழர் ஆட்சி மறைந்து வீரபாண்டியன் (கி.பி. 1265 – 1285) கொங்கு நாட்டின் அரசன் ஆனான்.

கனகபுரம் லிங்கையன் வீரபாண்டியன் படையில் சேர்ந்து தன் வீரத்தாலும், தீரத்தாலும், கூர்மையான அறிவாலும் படிப்படியாக உயர்ந்து தளபதி ஆனான். பின் வீரபாண்டியனின் அமைச்சனும் ஆகி 'உத்தரமந்திரி' என்ற தலைமைப்பட்டம் பெற்றான். பாண்டியர் சார்பில் வடகொங்கு நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றான்.

மேல்கரைப் பூந்துறை நாடு, அரையநாட்டுப் பகுதியில் அடிக்கடி பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் பெரும் துயருற்றனர்.

பவானியாறு காவிரியோடு கலக்கும் இடத்தில் தடுப்பணை கட்டி நீர் மட்டத்தை உயர்த்தி ஒரு கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய முடியும் என்று எண்ணினான். ஓரிடத்தில் அதற்குரிய மாதிரித் திட்டம் அமைத்தான். அவ்விடம் 'எலவமூலை ' எனப்பட்டது (இன்றைய எலவமலை).

காவிரியோடு பவானியாறு கலக்கும் இடத்தில் சற்று வடமேற்கில் அணைத்தோப்பை மையப்படுத்திப் பவானியாறு இரண்டாகப் பிரிந்து பின் ஒன்று சேர்கிறது. அணைத்தோப்பின் வடபுறம் ஆழமாக இருப்பதால் அதன்வழியே பெரும்பாலும் ஆற்றுநீர் சென்று காவிரியில் கலந்துவிடும். அந்த வடகுதியில் 1350 அடி நீளம் ஒரு சுவர் எழுப்பி (முறியான் அணை) தண்ணீரைத் தென்புறம் திருப்பித் தேக்கித் தடுப்பணையில் நீர் தேங்கி நிற்க கரையைப் பலப்படுத்தி அது நிலைத்து நிற்கப் பலகைக் கற்களைப் பரப்பி அவை அனைத்தும்

'குட்டைக் கொழுக்களால்' ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு கொழு உள்ள குழிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றச் செய்தான்.

12 ஆண்டுகள் முயன்று வாய்க்கால் வெட்டினான். காலிங்கராயன் அணையிலிருந்து நொய்யல் 32 மைல், ஆனால் 32 மைல் தூரத்தை 56 1/2 மைல் கால்வாய் கடக்கிறது. காலிங்கராயன் அணை கடல் மட்டம் 534 அடி. நொய்யல் கடல்மட்டம் 412.48 அடி. இடையில் உள்ள தூரம் 32 மைல். தெற்காகவும், தென்கிழக்காகவும் கால்வாய் செல்லும் வழியில் மைலுக்கு 3.79 அடி நிலம் தாழ்வாக உள்ளது. நேராக கால்வாய் வெட்டினால் வயலுக்குப் பாயாமல் விரைந்து நீர் ஓடிவிடும். அதற்காக மேடு கண்டு இடமெல்லாம் வளைத்து வளைத்து வாய்க்காலை வெட்டச் செய்தான். கால்வாய் நீளம் 56 1/2 மைல். அதாவது 32 மைல் நீளம் கடக்க கால்வாய் 56 1/2 மைல் பயணம் செய்கிறது. பெரும்பாலான இடங்களில் மேற்குப்பக்கம் (வலப்பக்கம்) கரை இல்லை என்பது அதிசயமான ஒன்றாகும்.

குடும்பச் சொத்து பாண்டியன் உதவி, மக்கள் கொடுத்த மகமைப் பணத்துடன் "காலிங்கராயன் பணம்" என்ற வரியும் விதிக்கப்பட்டது. எல்லாச் சமூக மக்களும் "வேளாளர் செட்டிவர்த்தகாள் பலபட்டடை" கூடி முடிவு செய்து காலிங்கராயனுக்கு உதவினர்.

கொங்கு நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த 10 பேர் கொண்ட ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. அணை, கால்வாய் வெட்ட "தாவுதுறை" பார்த்து உதவியவர் காங்கய நாட்டுக் காடையூர்ச் சரவண காங்கேயன்.

1282 ஆம் வருடம் தமிழ் விய வருடம் தை மாதம் 5 ஆம் நாள் அணை, கால்வாய்ப்பணிகள் நிறைவு பெற்றன ( ஜமீன் ஊத்துக்குளி அகத்தூரம்மன் கோயில் கல்வெட்டு)

உலகில் மூன்று செயல்கள் மிக அரியன என்று ஒரு புலவர் பாடியுள்ளார். அவை சீதையை மீட்க இராமன் சேது அணை கட்டியதும், கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டியதும், காலிங்கராயன் அணை கட்டியதுமாகும் என்று பாடியுள்ளார்.

" திரைகொண்ட வாரியை மாலடைத் தான்செழுங் காவிரியை
உரைகொண்ட சோழன் முன்னாள் அடைத் தான்உலகு ஏழறிய
வரைகொண்ட பூந்துறை நாடது வாழப் பவானிதனைக்
கரைகொண் டடைத்தவன் வெள்ளோடைச் சாத்தந்தை காலிங்கனே "

என்பது அப்பாடலாகும்.

காலிங்கராயன் கால்வாய் உபரிநீர் நொய்யலில் வீணாகக் கலப்பதைக் கண்ட காலிங்கராயன் அதனை நொய்யலில் தேக்கி அணை கட்டிக் கால்வாய் வெட்டி அமராவதி வரை கொண்டு செல்ல முற்பட்டான். அப்பணி முற்றுப் பெறவில்லை. விதரி அத்த;பபாளையம் அருகே உடைந்த நிலையில் அணையும், வெட்டிய கால்வாய்ப் பகுதியும் இன்றும் காட்சியளிக்கின்றன.

வெள்ளோடு புதுவலசு நல்லன வேள்காதல்

" வானி நதியைக்கொண்டு வாய்க்கால் ஐங்காதவழி
தானுயர்வாய்க் கொண்டுபோய்த் தானடத்து மெய்க்குலத்தோன்"

என்றும், வெள்ளோடு பெரியண்ணன் குறவஞ்சி

" திண்டிறல் வானியில் கண்டனை கட்டி
கருவூர் வரைக்கும் வரிசையாய் வாய்க்கால்
நடத்தும் உதாரன் படைக்குயர் தீரன்
தாலங்கள் புகழும் காலிங்கராயன்"

என்றும் புகழுகிறது. எனவே நதிகள் இணைப்புக்கு முதலில் சிந்தித்துச் செயலாக்க முனைந்தவன் காலிங்கராயன்.

காலிங்கராயனின் வேறு சில பணிகள்

1. தாழ்த்தப்பட்ட மக்கள் கால்களிலே பாதரட்சை கோத்துக் கொள்ளவும். வீடுகட்குச் சாந்து (காறை) இட்டுக்கொள்ளவும், நன்மை தீமைக்குப் பேரிகை முதலிய வாத்தியம் கொட்டவும் உரிமை அளித்தான் (வெள்ளோடு கல்வெட்டு)

2. வரி வசூல் செய்வோர், (அரசு, கோயில்கட்கு) வரி செலுத்தாவிடில் "மண்கலம் தகர்த்து வெண்கலம் பறிக்கப்பட்டனர் (ஜப்தி). ஆனால் காலிங்கராயன் வெண்கலம் பறிக்குமிடத்து மண்கலம் தந்து வெண்கலம் பறிக்க " என்று ஆணையிட்டான். (வெள்ளோடு கல்வெட்டு)

3. காடழித்து நாடாக்கி மக்களைக் குடியேற்றினான்" காலிங்கராயன் காடு பிடித்து அழித்து நாடாக்கி வெள்ளிரவெளி " (குன்னத்தூர்க் கல்வெட்டு)

4. பல புதுக்குளங்களை வெட்டியதோடு, பழுதுபட்ட பல ஏரி குளங்களைச் சீர்படுத்தினான். "விசயமங்கலத்தில் வடக்கு வாசல் வாகைக்குளம் நெடுநாள் பாழ்பட்டுக் கிடந்ததாகக் கேட்டு அடைத்து வீரபாண்டியப் பேரேரி என்று காலிங்கராயன் பெயரிட்டான்" (விஜயமங்கலம் கல்வெட்டு)

" கொங்கு பெருமகன்" காலிங்கராயன் நாள் தை 5 ல் கொண்டாடுவோம் !

# கலிங்கராயன் கால்வாய்



# காலிங்கராயன்

- புலவர் செ. இராசு

*"காளிங்கராயன்*
*கடாட்சத்தினாலே*
*சாலவே இந்தத்*
*தரணியில் வாழும்*
*குடியானவர்கள்*
*கூடிய சபையில்*
*வடிவான பள்ளை*
*வந்துமே ஆடிய*
*சஞ்சீவி"*

- ஈரோடு ஜயனாரப்பன் பள்ளு

*"காசினியில் வானி நதி*
*பெருக்கமாகி*
*காலிங்கராயன் தன்*
*கரைகள் பொங்கி*
*பேசரிய செந்நெல்களும்*
*கமுகு வாழை*
*பிரபலமாய் கிழங்கு கனி*
*விளைவு மாகி"*

- கொளத்துப்பாளையம் பகவதியம்மன் ஊஞ்சல் பாட்டு

## அணை, கால்வாய் உருவான வரலாறு

ஈரோடுமாவட்டம், வெள்ளோட்டை அடுத்த கனகபுரத்தில் கொங்கு வேளாளரில் சாத்தந்தை குலத்தில் நஞ்சையன் என்பாரின் மகனாகப் பிறந்த லிங்கையன் வீரபாண்டியனிடம் அலுவலனாகச் சேர்ந்து அமைச்சனாகி உத்தரமந்திரி என்று பெயர் பெற்றான்.

பூந்துறை, அரைய நாட்டுப் பகுதிகள் வாழ வீர பாண்டியன் உதவி கொண்டும், குடும்பச் சொத்தைக் கொண்டும், காலிங்கராய வினியோகம் என்ற வரி வசூலித்தும் ஊராட்சிக் கோட்டை மலையையும், அங்கிருந்து அணைக்கு வரும் வழியையும் ஆயிரம், ஆயிரம் பொன்னுக்கு விலைக்கு வாங்கி "எலவமூலை" (எலவமலை) கிராமத்தில் அணை, கால்வாய் மாதிரி அமைத்து 12 ஆண்டுகள் தெய்வ அருளால் தவமிருந்து அணையைக் கட்டிக் கால்வாயை வெட்டி முடித்தான். இப்பணி கி.பி. 1253-ஆம் ஆண்டு தொடங்கி 1265-ஆம் ஆண்டு முற்றுப் பெற்றது.

## பட்டப்பெயர்

தமிழக அரசர்கள் தம் அதிகாரிகட்குக் கொடுக்கும் மிகப்பெரிய பட்டப்பெயர் காலிங்கராயன் என்பது. பாண்டியர் கல்வெட்டுக்கள் "ஐயன் காளிங்கராயன்" என்று மரியாதையுடன் குறிக்கிறது. கச்சிராயன், காடவராயன், பல்லவராயன், வில்லவராயன் என்பன இதைப்போன்ற வேறு பெயர்கள்.

## வீர சைவ மரபா?

காலிங்கராயன் இயற்பெயர் லிங்கையன், தந்தை பெயர் நஞ்சையன், அவர்கள் வழிபட்ட ஒரு சிவாலயம் நஞ்சுண்டேசுவரர் கோயில். அவர்கள் வீர சைவ மரபைச் சேர்ந்திருக்கலாம், இது ஆய்வுக்குரியது.

## முற்போகம் விளையும் முதல் வாய்க்கால்

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 16-ஆம் தேதி மாலை 6 மணிக்கு நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் அனுமதிக்கப்பட்டு ஏப்ரல் மாதம் 30ஆம் தேதி மாலை 6 மணிவரை 10½ மாதங்களுக்குக் காலிங்கராயன் கால்வாயில் தண்ணீர் விடவேண்டும் என்பது அரசு ஆணை.

(பொதுப்பணித்துறை ஆணை எண் 2647, நாள் : 02.11.1966)

இன்று பருவமழை பொய்த்துவிடுவதால் இவ்வாறு நடைபெற வாய்ப்பில்லை.

## வனம் வயலாகும்

காவிரியோடு பவானியாறு கலக்கும் இடத்தருகே பவானியாறு மடங்கும் வண்ணம் வீரபாண்டியனின் அமைச்சன் கல்வியில் சிறந்த காலிங்கராயன் அமைத்த கால்வாயின் கழிவு தண்ணீர் கூட வனத்தை வயலாக்கும் என்று பாடுகிறார் குந்தாணி சாமிநாதக் கவிராயர்

"எற்று திரைப்பொன்னி கூடுறு வானி இடைமடங்க

வெற்றி மிகுத்த அதிவீர பாண்டிய வேந்தமைச்சன்
கற்ற அறிவினன் காலிங்க ராயன்செய் கால்கழிநீர்
உற்ற வனத்தை உறுவயல ஆக உயர்த்தியதே

என்பது அவர் பாடிய பாடல். அன்று காலிங்கராயன் கால்வாய் வனத்தை வயலாக்கியது.

(இன்று வயலை வனமாக்குவது போல நாம் கால்வாயை மாசுபடுத்திவிட்டோம்!)

## முப்பெரும் அரிய செயல்கள்

சீதையைச் சிறை மீட்க இராமன் கடலை அடைத்துச் சேது சமுத்திர அணை உண்டாக்கியது முதல் அதிய செயல்! காவிரி பெருகிய காலத்தில் காவிரிக்கு கரை கட்டிய கரிகாலன் செயல் இரண்டாவது அரிய செயல்!.

அதனை ஒத்த மூன்றாவது அரிய செயல் எது தெரியுமா? பூந்துறை நாடு வாழ பவானி ஆற்றை அடைத்துக் காலிங்கராயன் கட்டிய அணையும் வெட்டிய வாய்க்காலுமேயாகும் என்று ஒரு புலவர் பாடுகிறார்!.

"திரைகொண்ட வாரியை மாலடைத் தான்செழும் காவிரியை
உரைகொண்ட சோழன் முனாள் அடைத்தான் உருகு எழறிய
வரைகொண்ட பூந்துறை நன்னாடு வாழஅவ் வானிதனைக்
கரைகொண் டடைத்தவன் வெள்ளோடைச் சாத்தந்தை காலிங்கனே!

என்பது சிறப்புமிகு அப்பாடலாகும்.

## காலிங்கராயன் கால்வாய்ப் பற்றி வெளிநாட்டவர் குறிப்புகள்

1) தொன்மையான அணையும், வாய்க்காலும் புத்திக் கூர்மையுடைய உள்ளூர்த் தலைவனால் செய்யப்பட்ட வியத்தகு செயல்,

(திப்புவிற்கும், கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் சமரசம்

ஏற்படுத்த முயன்ற கிறிஸ்டியன் ஃபெரெடரிக் ஸ்வார்ட்ஸ் 7-8-1779 நாட்குறிப்பில்)

2) "தெய்வ கடாட்சத்துனாலே சர்ப்பம் போன போக்கில் வாக்கியாலும் வெட்டி வச்சு அணையும் கட்டி வச்சு காலிங்கராயன் என்கிறவர் காவடிக்கா நாட்டுக்கு மன்புதாரனாயி ஊத்துக்குளி பாளையக்காரர் என்று பட்டாபிஷேகம் செய்யப்பட்டது. நாளது வரைக்கும் காலிங்கராயன் அணை என்றும், காலிங்கராயன் வாக்கியால் என்றும் பேர் பிரசித்திப்படலாச்சுது"

(லெப்டினன்ட் காலனல் காலின் பெக்சன்சி
01.03.1798 Calinga Ray Gavunden Pattagar of Uootoocoolie in
Malabar என்னும் ஆவணத்தில்)

3) "பவானியிலிருந்து புறப்பட்டு ஈரோட்டுக்குப் பக்கத்தில் ஓடுகிற காலிங்கராயன் கால்வாய் சிறந்த வேலைப்பாடுள்ளது. அதன் நீளம் 15 மணி பயண தூரம். காலிங்கராயன் செல்வமும், செல்வாக்கும் பெற்றவராக இருந்தார். இது 400 ஆண்டுகட்கு முற்பட்டது. அவரது குடும்பத்தினர் இதற்காக நிலங்கள் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை. ஈரோட்டில் சிறு பாலத்தின் மேல் இந்த வாய்க்கால் ஓடுவது அருமையான வேலைப்பாடாக அமைந்துள்ளது.
(புக்கானன் 07.11.1800; தன் Journey from Madras through Mysore Canara and Malabar என்ற நூலில்)

4) "காளிங்கராயன் அணை கடல் மட்டத்திலிருந்து 534 அடி உயரம். நொய்யலில் காலிங்கராயன் கால்வாய் கலக்கும் இடம் கடல் மட்டத்திலிருந்து 412.48 அடி உயரம். இடையில் உள்ள தூரம் 32 மைல்; ஆனால், கால்வாயோ 57 மைல் நீளம். மைலுக்கு 3.79 அடி தாழ்வாக கால்வாய் ஓடுகிறது. 1840 மதகுகள் இருப்பது மிக அதிகம்.

(ரௌட்டன், 1845)

5) "கால்வாய் முழுவதும் நேரடியாகவே வயலுக்குத் தணணீர்

பாய்ச்சப் பல மதகுகள் உள்ளன. மதகுகளைக் குறைத்துக் கிளை வாய்க்கால்கள் அமைந்தால் இன்னும் ஏராளமான நிலங்களுக்கு நீர் பாய்ச்ச முடியும். இக்கால்வாயின் மிகப்பெரிய குறைபாடு அது மிகவும் பெரிதாக இருப்பதே" (ஹன்னான் 1860)

6) "அணையிலிருந்து விடப்படும் தண்ணீர் பெரும் பகுதி வீணாகிறது. நொய்யலில் அணை கட்டிக் காலிங்கராயன் கால்வாயை அமராவதி வரை கொண்டு சென்றால் 13000 ஏக்கர் அதிகமாகப் பாசன வசதி பெறும்.

7) "தலை மதகிலேயே 20 அல்லது 30 ஏக்கர் பாய வேண்டிய நீர் வருகிறது. ஆனால், இரவும் பகலும் பாய்ந்து வளப்படுத்துவது 2 அல்லது 3 ஏக்கர்தான். மற்ற தண்ணீர் கழிவு நீராக வீணாகிறது. மதகுகள் சாதாரண கற்களாலும் மண்ணாலும் அமைக்கப்பட்டுச் சுரங்கம் போல் உள்ளன. மதகுகள் சரியாக இல்லை" (அருண்டேல் 1880)

இன்னும் சர் ஆர்தர் காட்டன் (1850), மாண்ட் கோமரி (1838), மீடு பென்னிகுக் அட்ரி குழு (1876), மார்கன் (1883) ஆகியோர் காலிங்கராயன் அணை, கால்வாயைப் பார்வையிட்டுப் பல கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

## காலிங்கராயன் அறப்பணிகள்

பவானியாற்றில் டணாய்க்கன் கோட்டைப் பகுதியில் காலிங்கராயன் அணை ஒன்று கட்டி கால்வாயும் வெட்டினார். அது "லிங்கையன் அணை" என்று காலிங்கராயனின் இயற்பெயரால் வழங்கப்பட்டது. 1799-இல் மேக்ளியாட் அணையையும், கால்வாயையும் பழுது பார்த்தார். இப்போது இவை பவானிசாகர் அணையில் மூழ்கிவிட்டது.

விசயமங்கலம், விதரியான திருச்சிற்றம்பல நல்லூர், வெள்ளோடு, கனகபுரம், எலத்தூர், சர்க்கார் பெரியபாளையம் ஆகிய இடங்களில் குளங்கள் வெட்டினார். சிலவற்றைப் பழுது பார்த்தார்.

வெள்ளோடு, திங்களூர், கவுண்டச்சிபாளையம், ஊத்துக்குளி, போன்ற பல இடங்களில் கோயில்களைக் கட்டினார். மானியங்கள் பல அளித்தார். பூசைகள் நடத்த ஏற்பாடு செய்தார். திருச்செங்கோட்டிற்குக் கொடை பல அளித்தார்.

கச்சிராய நல்லூர், வெள்ளிரவெளி, எலவமலை, காலிங்கராயன்பாளையம், ஊத்துக்குளி போன்ற பல ஊர்களை உருவாக்கினார்.

கோயில் நிலங்களை உழுது மேல்வாரம் கொடுக்காதவர்கள் வீட்டில் கோயில் அதிகாரிகள் மண்கலம் தகர்த்து வெண்கலம் பறித்துக் கொள்வர் (ஜப்தி). காலிங்கராயர் வெண்கலம் பறிக்கும்போது மண்கலம் தந்து வெண்கலம் பறிக்குமாறு ஆணையிட்டார்.

## தெய்வமானான்

காலிங்கராயன் அணைத்தோப்பில் காலிங்கராயனுக்குக் கோயில் அமைத்து மக்கள் வழிபட்டனர். தலை மதகிலும் உருவம் அமைக்கப்பட்டது. வமிசாவளி, ஐயனாரப்பன் பள்ளு நூலில் இதைப் பற்றிய குறிப்பு வருகிறது. வருஷப் பிரதியும் உற்சவம் நடைபெற்றுள்ளது.

## நதிகள் இணைப்புக்கு முன்னோடி

காலிங்கராயன் கால்வாய் நீர் கடைசியாக நொய்யலில் கலக்கிறது. அந்த இடத்தில் அணை கட்டி அமராவதி வரை கால்வாய் வெட்டக் காலிங்கராயன் முனைந்துள்ளார். அத்திப்பாளையம் அருகே நொய்யலில் அவர் கட்டிய அணை உடைந்து கிடக்கிறது. "ஓட்டை அணை" எனப் பெயர் வழங்கப்படுகிறது. அங்கிருந்து அமராவதி வரை கால்வாய் வெட்டிய அடையாளம் இன்னும் காணப்படுகிறது.

## ஊத்துக்குளியின் உயர் எல்லைகள்

பொள்ளாச்சி ஜமீன் ஊத்துக்குளியில் காலிங்கராயன் தம் பாளையப்பட்டை நிர்வாகம் செய்யும்போது அதன் எல்லைகளை ஓர் ஆவணம் கூறுகிறது.

எல்லைப்பள்ளம்

மணியாறு கம்பளத்துறை ஊத்துக்குளி பாளையப்பட்டு தாளக்கரைப் பள்ளம்

பாலாறு

(கிழக்கு மேற்கு 4 காதம், தெற்கு வடக்கு 2 காதம்)

## சாத்தந்தைக்குப் பாராட்டு

காளிங்கராயன் செயலால் கொங்கு வேளாளரில் சாத்தந்தை குலமே மிகவும் மக்களால் சிறப்பிக்கப்பட்டது சாத்தந்தை குலம்.

"வானி நதியைக் கொண்டு
வாய்க்கால் ஐங்காத வழி
தானுயர்வாய்க் கொண்டுபோய்
தாடைத்தும் மெய்க்குலம்"
"வானிதனில் அணை கண்ட
சாத்தந்தை மேரு"

என புதுநகர் நல்லணவேள் காதல், வெள்ளோடு பெரியண்ணன் குறவஞ்சி ஆகியவற்றில் பாராட்டப்படுகிறது.

## உதவியோர்க்குச் சலுகை

அணை கட்டவும், கால்வாய் வெட்டவும், மதகுகள் அமைக்கவும் கம்மாளர் எனப்படும் ஆசாரி குலப் பெருமக்கள் பேருதவி புரிந்தனர்.

அவர்கட்குக் காலுக்குச் செருப்பு அணியவும், வீடுகளுக்குக் காரை பூசவும், நன்மை தீமைக்கு வாத்தியம் வாசிக்கவும் இருந்த தடையைக் காளிங்கராயன் நீக்கினார்.

## நன்றி மறவாச் செயல்

அணை அருகேயுள்ள ஊர் காலிங்கராயன்பாளையம். 12 ஆண்டுகள் முடி வளர்த்து சபதம் கூறி அணை, கால்வாய்ப் பணியை முடித்தான். பணி முடிந்து அசதியில் தூங்கவே தூக்கம் கலையாமல் முடியை நாவிதர் மழித்து வணங்கி நின்றார். அவர் செயலை மெச்சி

காலிங்கராயன்பாளையத்துக்கு நாசுவன்பாளையம் என்று பெயரிட்டார். இன்றும் காலிங்கராயன்பாளையம் மேட்டு நாசுவன்பாளையம், அணை நாசுவன்பாளையம் என்ற இரு வருவாய்க் கிராமமாக உள்ளது.

## காலிங்கராயர் தெரு

கோவையில் ஒரு முக்கியமான தெரு காலிங்கராயர் பெயர் பெற்று விளங்குகிறது. ஊத்துக்குளி பாளையப்பட்டில் 33ம் பாளையக்காரராக விளங்கிய முத்துராமசாமிக் காளிங்கராயர் (1864 - 1931) பெயரால் அத்தெரு பெயர் பெற்றது.

இவர் 19, 20-08-1917இல் நடைபெற்ற பிராமணரல்லாதார் மாநாட்டின் (Non-Brahmin Conference) வரவேற்புக்கு குழுத்தலைவர். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் (South Indian Liberal Federation) மிக முக்கியமான உறுப்பினர். சென்னை மாகாண ஜமீன்தார்கள் - நிலக்கிழார்கள் சங்கத்தின் (Madras Zamindars and Landlords Association) துணைத்தலைவர். இவர் பொதுப்பணிகட்காக இந்திய அரசு இவருக்கு 1913இல் "திவான்பகதூர்" பட்டம் வழங்கியது. இவரது மகளுக்கும், சமத்தூர் இளைய ஜமீன்தாரருக்கும் 1901-இல் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

## வாழையடி வாழை

34-ஆம் பாளையத்துக்காரர் அகத்தூர் முத்துக்கிருஷ்ணசாமிக் காலிங்கராயர் முதல் உலகப்போரின் போது படைக்கு ஆட்கள் சேர்ப்பதில் பேருதவி புரிந்தார். கௌரவ நீதிபதியாக இருந்தார். படையில் மிக உயர்ந்த பதவிக்கு ஆளுநரால் அழைக்கப்பட்டார், மறுத்து விட்டார். 10.12.1919, 03.08.1920ல் இந்திய அரசு செயலாளரால் பாராட்டப் பெற்றார்.

35-ஆம் பாளையத்துக்காரர் அகத்தூர் முத்துராமசாமிக் காலிங்கராயர் 09.04.1918ல் பிறந்தார். 13.04.1936இல் பாளையக்காரர் ஆனார். சமூக சீர்திருத்தம் பொதுமைக் கொள்கையில் மிகுந்த ஈடுபாடு

கொண்டவர். அரசியல் இயக்கங்கட்கு வழிகாட்டியாக இருந்தார். அஞ்சாமை, ஆற்றல், பேரறிவு மிக்க இவர் கோவையில் அறிஞர் அண்ணா சிலை நிறுவவதில் பெரும் பங்காற்றினார். அண்ணா நினைவாகப் பல நிறுவனங்கள் நிறுவ முயன்று வருகையில் 20.11.1966 அன்று மறைந்தார். 36-ஆம் பாளையக்காரர்கள் ஆகிய காலிங்கராயர்கள் தற்போது நம்மிடையே உள்ளனர்.

(காளிங்கராயன் பற்றிய மேற்கண்ட வரலாற்றுக் குறிப்புக்கள் 08.07.1987இல் புலவர் செ. இராசு தொகுத்து வெளியிட்ட "காளிங்கராயன் கால்வாய்" என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டவை.)

பூந்துறை நாட்டிலுள்ள வெள்ளோட்டில் சாத்தந்தை குலத்தினர் வாழ்ந்து வந்தனர். இவர்களின் காணியாட்சி காவடிக்கா நாடு. இவர்களில் காலிங்கராயர் என்பார் வீரபாண்டியன் அமைச்சராய்த் திகழ்ந்தார். இவர் தம் பெயர் சுந்தரபாண்டிய காலிங்கராயன். (கொடுமுடிக் கல்வெட்டு).

இவரைப் பற்றிய செய்திகட்குக் கொங்கு நாட்டில் அமைந்துள்ள பல்வேறு கோயில்களில் பொறிக்கப்பட்ட சாசனங்கள் சான்று பகருகின்றன. வெள்ளோட்டில் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு கம்மாளருக்கு உரிமை வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது.

இவர் பவானி கூடலிலிருந்து ஒரு அணைகட்டி கொடுமுடி வரை பாய வழி செய்தார். இவ்வணை இவர் பெயரால் காலிங்கராயன் அணையென்றும் அண்மையில் உள்ள ஊர் காலிங்கராயன்பாளையம் என்றும், கால்வாய் காலிங்கராயன் வாய்க்கால் என்றும் இன்றளவும் வழங்கி வருகிறது. இவர் "திரிபுவனச் சக்ரவர்த்தி, கோனேரின்மை கொண்டான்" என்னும் பட்டங்களையுடையவர்.

இவர் பரம்பரையினருக்கு இங்குள்ள கொங்கு நாட்டவர் உரிமை வழங்காததால் ஆனைமலைப் பகுதியைச் சார்ந்த காவடிக்கா நாடு சென்று ஊத்துக்குழியில் தங்கினர். மாடுகளுக்கு ஊற்றுப்பறிக்கப்பட்ட இடமே இன்று ஊத்துக்குழி என்று வழங்குகிறது. ஊத்துக்குழி சென்ற பின்னர் இம்மரபில் வந்தோர் மற்ற பாளையப்

பட்டுக்களை விடத் தம்முடையது சிறந்தது என்ற பெருமை பெற வேண்டி, காலிங்கராயர் பெனுகொண்டாச் சென்று இராயரைக் கொண்டு பல சிறப்புகளைப் பெற்றார். பெற்ற சிறப்புகளை வம்சாவழி விரிவாகக் கூறுகிறது.

## பாண்டியர்களை வெல்லல்

9-ஆம் பட்டத்திலிருந்த நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் மதுரையில் விசுவநாத நாயக்கர் அழைத்ததின் பேரில் அங்கு சென்று தென்பாண்டி நாட்டைத்தனியாய் ஆண்டுவந்த 5 பாண்டியரைப் போரிட்டுக் கொன்றும், சிலரைக் கைதுசெய்தும் மதுரைக் கோட்டைக்குக் கொண்டுவந்தார். மகிழ்ந்த நாயக்கர் 5வது கொத்தளத்திற்குத் தலைமை வகிக்கும் படியும், பாளையப்பட்டுக் கிராமங்களைச் சுத்த ஜாரியாக அனுபவிக்கும்படியும் கூறினார். இவ்வாறு 18-ஆம் பட்டம் வரை அனுபவித்து வந்தனர்.

23 ஆம் பட்டக்காரர் நஞ்சைய காலிங்கராயர் மைசூர் அரசர் உத்திரப்படி குடகு மன்னனை வென்றார்.

குமாரசாமி காலிங்கராயக்கவுண்டர் பட்டத்திலிருந்த பொழுது மைசூரைத் திப்பு சுல்தான் ஆண்டு வந்தான். நாட்டில் அமைதி இல்லை, கள்ளர் தொல்லை அதிகம், திப்புவின் தொல்லை தாங்காத காலிங்கராயர் தன் பிஞ்சுக் குழந்தைகளைப் பம்பாய்ச் சீமையில் வைத்திருந்தாராம்.

இம்மரபினர் இன்றளவும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பெண்வழித் தொடர்பு பழைய கோட்டையுடன் நீண்ட நெடுங்காலமாக நடந்து வருகின்றது.

# சாத்தந்தை குலம்

- புலவர் செ. இராசு

கொங்கு வேளாளர் குலங்களில் தொன்மையும் புகழும் பீடும் பெருமையும் மிக்க குலங்களில் சாத்தந்தை குலமும் ஒன்றாகும்.

"மங்கைமணி சாத்தந்தை"

"கனிவு சாத்தந்தை"

"பாவலர்சொற் பாடல் படைத்த சாத்தந்தை"

"அதிபர் சாத்தந்தை"

"பொருந்து சாத்தந்தை"

"வல்லமைசேர் சாத்தந்தை"

என இலக்கியங்கள் போற்றிப் புகழும் தன்மையுடையது சாத்தந்தை குலம்.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 347ஆம் நூற்பாலின் படி "சாத்தந்தை" என்பது சாத்தன் + தந்தை என இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு தொடராகும். புகழ்மிகு சாத்தன் என்பவரின் தந்தையைக் குல மன்னவராகவும், முதல்வராகவும் கொண்ட குலத்தினர் என்று இது விரியும்.

சாத்தன் என்பது தமிழில் மிகவும் சிறப்புமிக்க ஒரு பெயராகும். சமண சமயத்து அருகப் பெருமானுக்கும் புத்தருக்கும் கூடச் சாத்தன் என்று பெயர் உண்டு. சாத்தன் என்றும் மாசாத்தன் என்றும் சங்க காலத்தில் புலவர்களும் புரவலர்களும் தம் பெயர்களைத் தரித்துக் கொண்டனர். சீத்தலைச் சாத்தனார், பெருந்தலைச் சாத்தனார், கருவூர்க்கதப்பிள்ளை சாத்தனார், பூதஞ்சாத்தனர், உறையூர் முதுகண்ணன் சாத்தனார், சேரன் அந்துவஞ் சாத்தன், பாண்டியன் கீரஞ்சாத்தன், மசாத்தனார் என்பன ஆண்பாற் பெயர்கள். பெண்பாற் பெயர் சாத்தி என்பது.

பொதுவாக எவரையேனும் சுட்டி அழைக்க இடுகுறிப் பெயர்போலச் சாத்தன் என்ற பெயரையே பயன்படுத்தினர். உரைகாரர் பலரும் சுகர ஆதாரப் பெயருக்குச் சாத்தன் என்பதனையே எடுத்துக்காட்டியுள்ளனர். சாத்தனூர் என்ற பெயரைத் தமிழகம் முழுவதும் பரவலாகக் காணுகின்றோம்.

திருவாளர்கள் வே.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர், கே.சி.சுப்பையா, டி.எம். காளியப்பா, கு. சேதுராமன் போன்றவர்கள் சாத்தன் + தந்தை = சாத்தந்தை என ஆன தொல்காப்பிய இலக்கண விதியை ஏற்றுக் கொள்கின்றனர். இதுபோன்ற இலக்கண விதி பெற்று அமைந்த கூட்ட பெயர்களாகக் கண்ணந்தை, கொற்றந்தை, பூச்சந்தை, பொருளந்தை, ஆந்தை, குமரந்தை, சேந்தந்தை போன்ற குலங்களை எடுத்துக் காட்டலாம்.

புலவர். அ.மு. குழந்தை அவர்கள் சாத்தந்தை என்ற தொடரைச் சாத்தன் + தந்தை என்று பிரிக்காமல் தை விகுதி பெற்ற இயல்பான பெயர்ச் சொல்லாகக் கொள்ளுகிறார்.

மடந்தை இளந்தை, வடந்தை, குழந்தை என்பன போவே சாத்தந்தை என்பது ஒரே சொல் என்று கூறி சாத்தன் + தை = சாத்தந்தை ஆயிற்று என்பார்.

திருச்சி வி. இராமமூர்த்தி அவர்கள் இப்பெயரைச் சாத்தந்தை என்று கொள்ளுகிறார்கள். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் சாத்தந்தை என்றே கொடு சாத்தாந்தை குலத்தின் சின்னம் ஆந்தை என்று கூறுகின்றார். இலக்கியம், தனிப்பாடல்கள் செப்பேடு, பட்டயம், கல்வெட்டு எதிலும் சாத்தந்தை என்று குலப்பெயர் கூறப்படுகிறதே அல்லாமல் எந்த ஒரு இடத்திலும் சாத்தாந்தை என்று இக்குலப்பெயர் எங்கும் காணப்படுவதில்லை. டாக்டர். கிருட்டிணசாமி அவர்கள் குண்டெலிகள் குலத்தோடு சாத்தந்தை குலத்தைத் தொடர்பு படுத்துவதும் சாத்தாந்தை என்று

குறிப்பதும் மிகவும் தவறானவையாகும். இவ்விருவர் கூற்றுக்களும் மரபுக்கோ வரலாற்றுக்கோ பொருந்தாதவையாகும்.

கொங்குக் கொடுமணலிலும் பிற இடங்களிலும் தொல்லியல் அகழாய்வு செய்யப்பெற்ற இடங்களில் அந்தை என்ற பெயர்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு சாத்தந்தை என்ற பெயரினைச் சாத்து + அந்தை என்று பிரிக்கலாம் என்ற கருத்தை டாக்டர். எ. சுப்பராயலு அவர்கள் வெளியிட்டார்கள். (சாத்து - வணிகம்) சாத்தன் என்பதற்கு வணிகர் கூட்டத் தலைவன் என்றும் பொருள் உணடு. மாசாத்தன் எனறு சிலம்பில் வணிகர் தலைவன் குறிக்கப் பெறுகின்றான்.

கொடுமணல் அகழாய்வில் "ஸாதந்தை" என்று பொறிக்கப்பட்ட ஓடு ஒன்று கிடைத்துள்ளது. இச்சொல்லை எழுதும்போது ஏற்பட்ட பிழை என்றோ அல்லது த என்பதை த்த என்ற கூட்டெழுத்தின் அடையாளமாகவோ கருதலாம். அப்படியானால் "சாத்தந்தை" என்ற பெயரினை 2300 ஆண்டுகட்கு முற்பட்ட பெயர் என்று நாம் கொள்ளலாம். இது வரலாற்றுச் சிறப்புமிக்க தொல்பொருட் சான்றாகும்.

சங்க இலக்கியங்களில் புறநானூற்றிலும் நற்றிணையிலும் சில பாடல்களைப் பாடிய ஒரு புலவர் பெயர் "சாத்தந்தையார்" என்று குறிக்கப் பெறுகிறது.

அபிதான சிந்தாமணியல பொற்சுடாரம் உரை மாற்றுக் கூறிப்புகழ்பெற்ற வணிகன் ஒருவன் பெயர் "சாத்தந்தை மகிரிஷி கோத்திரம்" என்று குறிப்பிடப் பெறுகிறது.

இடைக்காலத்திலும் "சாத்தந்தை" என்று பெயர் வைத்துக் கொண்டு வாழ்ந்த பெருமக்கள் சோழ நாட்டுப் பகுதிகளிலும் வாழ்ந்தனர் என்பதைக் கல்வெட்டுக் காட்டுகிறது.

ஸ்வஸ்திஸ்ரீ சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு

யாண்டு 33 ஆவது இத்திருவிளக்கு வைத்தான் சாத்தந்தை ஐய்யாறன் சங்கர நாராயணன் என்பது திருவரங்கக் கோயிலில் திகழும் ஒரு கல்வெட்டாகும். இவைகளின் மூலம் சாத்தந்தை என்ற பெயரின் தொன்மை, சிறப்பு இவைகளை உணருகின்றோம்.

# கால்வாய் வெட்டிய காளிங்கராயன்

- "ஈரோடை தமிழ்மணி" சு. **தங்கவிநாயகன்**

தமிழ்நாடு, நிலவளமும், குடிவளமும் நிறைந்தது. மேலும் குளம் தொட்டு வளம் பெருக்கினான் திருமாவளவன். இம்மன்னர் பிரான் காவிரியில் கல்லணை கட்டிப் புகழ் பெற்றவன். அதன் கிளையாறாகிய பவானி, காவிரியுடன் சேரும் இடத்திற்கு சற்று அருகாமையில் ஓர் அணையைக் கட்டிக் கால்வாய் வழியாகப் பலகல் தொலைவுவரை பல்லாயிரம் காணி நிலங்களுக்கு நீர்பாயும் கால்வாயை வெட்டினான் காளிங்கராயன் என்னும் குறுநில மன்னன்.

இம்மன்னன் தமிழகத்தில், குறிப்பாக கொங்கு நாட்டில், சிறப்பாக கொங்கு வேளாளக்கவுண்டர் சமூகத்தில், சுமார் ஏழு நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய ஒரு மாபெரும் வள்ளல். பூந்துறை நாட்டை ஆண்ட குறுநில மன்னன். அப்போது கொங்கு நாடு இருபத்து நான்கு சிறு நாடுகளாகப் பிரிந்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறுநில மன்னரால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. இதற்கெல்லாம் தலையான சிறந்த நாடு பூந்துறை நாடு ஆகும்.

பூந்துறை நாட்டின் நாட்டானாய் வெள்ளோட்டில் குடியிருந்த காளிங்கராயன் தன் மகனுக்கு மணம் செய்ய கொடுமுடியை அடுத்த நொய்யல் ஆற்றின் அருகே அமைந்துள்ள "ஆவுடையார் பாறை" என்ற ஊரில் வாழ்ந்துவந்த, பண்ணை குலத்தார் என்ற தம்மைத்துனரிடம் பெண் கேட்கச்சென்றான். அன்றிரவு பண்ணை குலத்தார் வீட்டில் தங்கி இருக்க, அவர்களது சமையல்காரன் விருந்து செய்ய எந்த வகை அரிசி போட்டுச் சமைப்பது என்று கேட்டான்.

அதற்கு, மணமகன் வீட்டார் "மேட்டுப்பாங்கான புன்செய் நிலப்பகுதியிலிருந்து வந்துள்ளனர். அவர்களுக்கு அரிசியின் வகைகளைப் பற்றியே தெரியாது. எனவே சாத்தந்தை குலத்தார்க்கு பழைய குருவை நெல் அரிசியே போதும்" என்று கூறினார். இதை அறிந்த காளிங்கராயன் மனம் வெதும்பி "என் புன்செய்நிலங்களை நெல்விளையும் நன்செய் நிலமாக்க ஒரு அணையும் கட்டி கால்வாயும் வெட்டி, அதன் கழிவு நீர் உங்கள் வீட்டருகே செல்லும்படி அமைத்த பின்னரே, உங்கள் வீட்டில் பெண் சம்பந்தம் கொள்வேன்" என்று சபதம் போட்டு அதைச் செயல்படுத்தும் உறுதியுடன் தன் இருப்பிடம் வந்தான்.

[ இந்தகாளியங்கராயனின் பூர்வீகம் பற்றி சிறிது ஆராய்வோம். சுமார் ஏழு நூற்றாண்டுகளுக்கு முன் நமது தமிழகத்தில் கொங்கு வேளாளர் என்ற கவுண்டர் சமூகத்தார் பெரியநாடு என்ற நடுமண்டலத்தில் (தற்போதுள் தென் ஆர்க்காடு மாவட்டத்தில்) ஒன்று திரண்டு பலம் மிக்க வீரர்களாய் வள்ளல்களாய் சிறப்புடன் வாழ்ந்தனர். கவிச் சக்கரவர்த்தியான கம்பரை இளம் வயதில் ஆதரித்தவரான திரு வெண்ணெய் நல்லூர் சடையப்பவள்ளல் வாழ்ந்த பகுதியே நம் வேளாளர்களின் பூர்வீகம் ஆகும். இதுவிபரம் காலிங்கராயரின் குடும்ப வரலாற்று நூலான திரு. அ. வடிவேல் என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட "அரச பரம்பரையும் ஜமீன்தார் வரலாறும்" என்ற நூலில் ஊத்துகுழி ஜமீன் முத்துசாமி காளிங்கராயர் வரலாறு என்ற பகுதியில் சுமார் நூறு பக்கங்களில் விளக்கி எழுதப்பட்டுள்ளது. மேலும் ஜே.எம். துரைசாமி பிள்ளை என்பவரால் எழுதப்பட்ட நூலிலும் இந்த விபரம் கூறப்படுகிறது. அப்போது நடுமண்டலத்தில் பெரிய நாட்டை ஆண்ட தொண்டைச் சோழ சக்ரவர்த்தி என்பவன் தன் மகளான ரிஷபதேவி என்பவளை சேர மன்னனுக்கு மணம் செய்வித்தான். தன் மகளுடன் சீதனப் பொருளாக நம் முதல் காளிங்கராயர் சேரநாட்டின் பாதுகாப்பிற்கு அனுப்பப்பட்டு, இப்பகுதிக்கு வந்து சேர்ந்ததாக ஒரு வரலாறு கூறுகிறது.]

தன் இருப்பிடம் வந்த காளிங்கராயன் அதே சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில் அன்று இரவு ஒரு கனவு கண்டான். அதில் பூந்துறையை அடுத்த பாடகவல்லி நாச்சியார் என்ற அவனது குலதெய்வம் அக்கனவில் தோன்றி "உன் விருப்பம் நிறைவேறும். பவானி ஆற்றுக் கூடுதுறைக்கு சற்று முன் பக்கம் ஒரு கல் தொலைவு சென்றால் அங்கு என் காவல் தெய்வங்களான வேம்பராயன், உத்தண்டராயன் என்ற இருவரும் உன்னை எதிர்கொண்டு வரவேற்பார்கள். அணை கட்டி முடியும் வரை உன்னுடன் இருந்து உனக்கு எல்லா உதவிகளையும் செய்வார்கள். மனம் கலங்காமல் விழித்தெழுந்து தன் குதிரைமீது அமர்ந்து அவ்விடம் நோக்கிச் சென்றான். அதன்படியே மீனவர், வடிவில் அவ்விரு தெய்வங்களும் வரவேற்று அணை கட்டி முடியும் வரை அங்கு தங்கி எல்லாவகையிலும் உதவினர் என்பது கன்னபரம்பரைச் செய்தி. மேலும் காளிங்கராயருக்கு பவானி,

"வானிலிங் கேசுவரர் வேதநாயகியம்மாள்
வந்துமுன் சாட்சி செய்ய
வாய்த்தபுகழ் சாத்தந்தை காளிங்கராயர்அணை
வரத்தினால் கட்டி வைத்தார்
வானிமுதல் ஆதிகரூர். அறுகாதமும் வளர்
வெகுசனம் பிழைக்க வேதான்"

என்று தனிப்பாடல் கூறுகிறது.

அம்மட்டோ? பவானிக்கருகில் உள்ள ஊராட்சி மலைக்கோட்டையும் அங்கிருந்து அணை கட்டுமிடம் வரையில் உள்ள வழியையும் ஆயிரமாயிரம் பொன்னுக்குவாங்கி, அங்கிருந்து கற்களை உடைத்து எருமை வண்டியில் அவற்றைக் கொணர்ந்து கட்டினான். இதை "மலை ஆயிரம் தடம் ஆயிரம்" என்ற பழமொழி இன்றும் நினைவூட்டுகிறது. அணைக்கட்டு வேலை நடக்கும்போது தம் உறவினர் பலரை குடும்பத்துடன் அழைத்து வந்து குடியிருப்பு வசதி செய்து கொடுத்த இடமே என்றும் "காளிங்கராயன் புதூர்"

என்று வழங்கப்படுகிறது. பன்னிராண்டுகள் வரை அணைக்கட்டு வேலையும் கால்வாய் வெட்டும் வேலையும் தொடர்ந்து நடந்து முடிந்தது. இக்கால்வாய் பாம்பு வழிகாட்ட அதன்படி வளைந்து வளைந்து வெட்டப்பட்டது என்பர். பொறியியல் வல்லுநர்கள் இவ்வாறு வெட்டியதில் வெள்ளத்தினால் ஏற்படும் அழிவு தடுக்கப்படுகிறது என்பர்.

காளிங்கராயன் அணையையும், கால்வாயையும் பற்றிக் கொடுமுடி மகுடேசுவரர் கோவில் அர்த்த மண்டபத்தில் உள்ள கல்வெட்டு. திங்களூர் அழகப் பெருமாள் கோவில் கல்வெட்டு விஜயமங்கலம் நாகேசுவரசுவாமி கோயில் கல்வெட்டு, நெரூர் கன்னீஸ்வரர் கோயில் கல்வெட்டு, எலத்தூர் சோரீசுவரர் கல்வெட்டு சர்க்கார் பெரியபாளையம் சுக்ரிவேசுரர் கோயில் கல்வெட்டு போன்றவை குறிப்பிடுகின்றன. மற்றும் பிறநாட்டார்களான ஸ்வர்ட்ஸ் பாதிரியார், டாக்டர். புக்காணன், மெக்கன்றி ராட்டன் குழுவினர் இக்கால்வாயின் சிறப்பையும் அமைப்பையும் கண்டு வியந்து தங்கள் பயணக் குறிப்பில் குறித்து அப்போது அரசாண்ட ஆங்கில அரசுக்கும் இச்செய்திகளை அறிவித்தனர். மேலும், காளிங்கராயன் இவை தவிர விஜயமங்கலத்தில் உள்ள வாகைப்புத்தூர் வாணக் குளத்தையும் பழுது பார்த்து பாசன வசதியைப் பெருக்கினான்.

மேற்கண்ட விபரங்களையும் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்கு நிலம்தானம் அளித்தலும், சிலபல திருப்பணிகள செய்தவைகளையும் திருச்செங்கோடு திருப்பணி மாலை, பல தனிப்பாடல்கள், கொங்கு மண்டலசதகம் முதலிய நூல்களில் காணப்படுகின்றன.

இத்தகு சிறப்பு மிக்க குறுநில மன்னனான காளிங்கராயன், அணையும் கட்டி, கால்வாயும் வெட்டி அதன் பயனை தானும் தன் வம்சத்தைச் சேர்ந்த சாத்தந்தை குலத்தினர் யாருமே பயன்படுத்தக் கூடாது என்று ஒரு சாபமும் இட்டான். அதன்படியே அவர்கள் வாழ்ந்தார்கள். மேலும் சிரமப்படாமல் இருக்க பூந்துறை நாட்டைவிட்டு

பொள்ளாச்சி ஆனைமலைக்கருகில் உள்ள ஊத்துக்குழிக்குச் சென்றான்.அதன் காரணத்தை அங்குள்ள அகத்தூரம்மன் கோயில் கல்வெட்டில் இன்றும் காணலாம். "ராயத்துப்பட்டக்காரர்களும், பாளையக்காரர்களும் சரியினுப்பும், சரிமிரியாதிகளும் கொடுக்கப்படாது என்று சொன்னதினாலே, மனவெறுப்பினாலே ஆனைமலைச்சருவு, காவிடிக்கா நாட்டு வனத்துக்குச் சென்றோம்". பின்னர் மாடுகளுக்குத் தண்ணீர் வேண்டி ஊற்றுக்குழிகள் பல தோண்டி தண்ணீர் கண்டதால் இந்த இடத்துக்கு ஊத்துக்குழி என்று பெயர் வந்தது. தற்போதும் அங்கு அரண்மனை போன்ற அமைப்பில் ஜமீன்தார் இல்லமாக அமைந்துள்ளது. இப்போது இவ்வூர் ஜமீன் ஊத்துக்குழி என வழங்கப்படுகிறது.

நமது கொங்கு வேளாள சமூகத்தலைவரான பழைய கோட்டை பட்டக்காரரும், இம்மாநாட்டின் தலைவருமான உயர்திரு. நல்ல சேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் அவர்களின் துணைவியார் அவர்கள், இந்த வரலாற்றுத் தந்தையான ஊத்துக்குழி முப்பத்தி ஐந்தாவது பட்டத்து ஜமீன்தார் அமரர், அகத்தூர் முத்துராமசாமி காளிங்கராயன் அவர்களின் அன்புச் சகோதரி ஆவார். மேலும் நமது பட்டக்காரரின் அன்புச் சகோதரி திருமதி. ருக்மணி அம்மையார் அவர்கள் ஊத்துக்குழி ஜமீன் அமரர். திருமிகு. ஏ.எம.ஆர். காளிங்கராயர் அவர்களின் துணைவி ஆவார்கள். எனவே கொங்கு வேளாள கவுண்டர்களின் தலைவர்களான இருபெரு குடும்பங்களும் ஒன்றாய் இணைந்தன. முன்னாள் பொள்ளாச்சித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராய் பணியாற்றிய ஏ.எம்.ஆர். மோகன்ராஜ் காளிங்கராயர், தற்போதுள்ள காளிங்கராய ஊத்துக்குழி ஜமீனின் சந்ததியார்களே ஆவர். இவர்கள் நீடுவாழவும், புகழோடு சிறந்து விளங்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துவோமாக! கொங்கு நாட்டின் முன்னோடிப் பாசனத்திட்டத்தை உண்டாக்கித் தந்த அவர்களின் வள்ளல் குடும்பம் குன்றின் மேல் இட்ட நந்தா விளக்காக என்றும் விளங்க இறைவனின் திருவருளை வேண்டுவோமாக!

# காலிங்கராய கவுண்டரின் கதை

பெரியார் மாவட்டம் காலிங்கராயன் என்ற பெயரும் பிரிக்க முடியாதவை. மாவட்டத்தின் ஒருபகுதியே மஞ்சளாக விளைந்து செழிக்க வலுவான காரணம் காலிங்கராயன் பாசன வாய்க்கால்.

பவானியில் குறுக்கே கட்டப்பட்ட தடுப்பணையிலிருந்து பிரியும் காலிங்கராயனில் ஆண்டில் பெரும்பாலான மாதங்களில் தண்ணீர் சென்று கொண்டிருக்கும்.

இந்த வாய்க்காலுக்குப் பின்னால் வெவ்வேறு விதமான வரலாறுகள். கதைகளோ என்றெண்ணச் செய்யும் தகவல்கள். ஆனால் மறுக்க முடியாத ஒரு விஷயம். தொலைநோக்குடன் இந்த அணையைக் கட்டி வாய்க்காலை வெட்டியவர் காலிங்கராயன்.

பவானியிலிருந்து நொய்யல் வரை வழியெல்லாம் கோணல் மாணலாகச் சென்று செழிக்கச் செய்கிறது வாய்க்கால்.

கோணல்களுக்கும் ஒரு காரணமுண்டு வாய்க்கால் தொடங்குமிடத்தில் கடல் மட்டத்திலிருந்து 534 அடி உயரம். நொய்யலில் 412 அடி உயரம். தொலைவு 50 கி.மீ. அதீத உயரம் காரணமாகத் தண்ணீர் விரைந்தோடுவதைத் தடுத்து வேகத்தைக் குறைக்கவே கோணல்கள் வளைந்து வளைந்து செல்வதால் வாய்க்காலின் நீளமும் சுமார் 90 கி.மீ.யாகி பயனடையும் பரப்பும் அதிகரிக்கிறது. அன்றைய தொழில்நுட்ப சாதனை!

தற்போது வாய்க்காலின் 786 மதகுகளின் வழியே (பதிவு செய்யப்பட்ட) 15,743 ஏக்கர் பரப்பு பாசனம் பெறுகிறது.

## காலிங்கராயனின் கதைதான் என்ன?

"ஊற்றுக்குழி பாளையக்காரன் காலிங்கராயன் வமிசவளியிலிருந்து (படிக்கச் சற்று சிரமமாக இருக்கும். ஆனால்,

அந்த நாள் தமிழையும் அறிய ஒரு வாய்ப்பு).

## ஊற்றுக்குழி பாளையக்காரன் காலிங்கராயன் வமிசவளி

தாராபுரம் துக்குடி பொள்ளாச்சி தாலூக்கா ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராயன் கவுண்டர் என்னப்பட்டவருடைய வமிசாவளி முதலான கைபீது:

என்னவென்றால்:-

பூர்வத்தில் சோழ தேசத்தில் தொண்டை மண்டலத்து வேளாளரென்று பேர் பிரசித்திப்பட்ட நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் பசுங்குடி பன்னீராயிரம் ஆக அறுபதுனாயிரம் கோத்திரக்காரர்களில் பிற்காலம்-ரிஷபகிரி-சோழராஜா மகளை முரை சரிந்த சேர ராஜா பாணி கிரஹணம் பண்ணிக் கொண்டபடியினாலே அந்தச் சமயத்தில் நற்குடி நாற்பத்தியெண்ணாயிரம் குடியில் எண்ணாயிரம் குடி சீதனம் கொடுத்தபடியினாலே அப்போ வரப்பட்ட வேளாளருக்கு தென் திசை நோக்கி வந்த படியினாலே தென்திசை வேளாளரென்று பேர் வரப்பட்டது.

சேர தேசத்துக்கு வரப்பட்ட வேளாளருக்கு சேரனுக்கு கொங்கண ரெண்ணும் பேர் இருக்கிற படியினாலே கொங்கு வேளாளரென்றும் கொங்குயிருபத்தினாலு நாடு யென்றும்-யேற்படுத்தி இறுக்கும் நாளையில் அக்காலத்தில் யென் வம்சஸ்தனான காலிங்க கவுண்டன் என்கிறவன் பூந்துரைனாட்டுக்கு காணியாள(னுஇ) (னுக்கு) மேல்கரை முப்பத்தி ரெண்டு கிராமதுக்குச் சேர்ந்த வெள்ளோடு குடியிருப்புக்காரனாயி தம்முடைய இஷ்ட தெய்வமான சர்வேஸ்வர பாடகவல்லி நாச்சாற் - தேவஸ்தானம் சீறனேதாரணம பண்ணிக் கொண்டிருந்தன.

பூந்துரை னாட்டுக்கு னட்டானஇ வெள்ளோட்டு - குடி இறுப்புக் காரனஇ யிருக்கும் னாளையில் - கங்கை குலம்-சர தந்த கோத்திரம் காலிங்க கவுண்டன்-யென்ங்குர-கலியாணம் பண்ண வேனுமென்று நினைச்சு-மாமன் மச்சுனனான-பண்ணகுலத்தாளி வீட்டுலே-பெண் கேட்டு கலியாணம் செய்யத் தக்கதாக யோசிச்சு-பெண் சம்மதமாகி

அந்த ராத்திரி சாப்புடுகுரதுக்கு சமயல் பண்ணுகிறவன் வந்து இவற்களுக்கு சமயல் பண்ணுகுரதுக்கு யெந்த அரிசி போடுகிறது யென்று கேட்க அவாள் கம்பு வெளயிற் சீற்மையிலே யிறுக்குர பேர்களுக்க யெந்த அரிசி யென்று தெரிய போகுது பரறிசி தானே போடு போவென்று சொல்ல அது சேதி மேற்படி காலிங்க கவுண்டன் கேட்டு அவாள் வீட்டிலே சாப்புடாத படிக்கு இறுந்து நெல்லு வெளையும்படியாக நீர் பாங்கு உண்டு பண்ணிக்கொண்டு உங்கள் வீட்டு பெண் கொண்டு சாப்பிடு சூடு தோணி இருக்கும் நாளையில் இவள் இஷ்ட தெய்வமான சர்வேஸ்வாரை தன்னுடைய அபீஷ்டம் சித்த வேணுமென்று நினைச்சுயிருக்கு வேளையில் றாத்திரி சொப்பனத்திலே ஒரு விருத பிராமண ரூபமாய் வந்து இந்தச் சந்தர்ப்பம் போரவளியாக வாக்கியால் வெட்டி வைக்க சொல்லி காரணமாக சொப்பணமாச்சுது அந்த சொப்பன மானவுடனே கண் முளிச்சு பாற்கும் மிடத்தில் ஒரு சர்ப்பம் பிரதிட்சமாகியிருந்தது. தான் கண்டு இருக்கப்பட்ட சொப்பனத்தை கண்டு அறிய வேணுமென்று நினைச்சு வீடு விட்டு வெளிஇலே வந்த சமயத்தில் சற்ப்பம் இவனை கண்டு முன்னே நடந்தது. அந்த சற்ப்பத்தைத் துடர்ந்து போய் யிந்த வழியாக போகுதென்ரு அடையாளங்கள் போட்டுக்கொண்டு வருகிற போது கொடுமுடி கேத்திரத்தில் சர்ப்பம் நிண்ணுது.

அந்தச் சற்ப்பம் போன போக்குலே வாக்கியாலு வெட்டி வைக்க வேணுமென்று னினைச்சு பவானி ஆத்திலே குறுக்கே கட்டி வைக்க வேணுமென்கிறதாக நினைச்சு யிருந்த சமயத்தில் பவாணி கூடல் ஸ்தளத்துக்கு மேல் புறத்தில் பவானியாத்துலே சர்ப்பம் குறுக்கே படுத்துக்கெண்டது. அந்த யிடத்துலே அணைக்கட்டி வைக்கவேணுமென்று பவானிக் கூடலுக்கே வடக்கை ஊறாச்சிமலையும் சடமும் சுத்த கிறயத்துக்கு வாங்கி அணை கட்டுகுர சமயத்தில் வெள்ளை வெட்டுவற் யென்ங்குற பாளையக்காரன் அணை கட்டுகுர யெல்லை தன்னதென்று சண்டை பண்ணின படியினாலே வெள்ளை வேட்டுவரை செயிச்சு அணையும் கட்டி வெகு திறவியங்கள் செலவளிச்சு சற்பம் போகியிருந்த அடையாளங்களை பிடிச்சு

வாக்கியால் வெட்டி கொடுமுடி வரைக்கும் வாக்கியால் வெட்டி வச்சு பவானி அணை முதல் கொடுமுடி ஸ்தளத்து ஆத்து வரைக்கும் முக்காத வழி தூரத்துக்கு சற்ப்பம் போன போக்குலே வாக்கியால் வெட்டின யேளு காதவளி நடை கோணக் கோணலாக வாக்கியால் வெட்டி வச்சான்.

அந்த சற்ப்பம்போன போக்குலே வாக்கியால் வெட்டி வசு பவானி ஆத்துலே சற்ப்பம் படுத்துயிறுந்த யிடத்திலே-அணையும் கட்டி விச்சு படியினாலே காளிங்க கவுண்டன் யென்னும் பேற்வரப்பட்டு பிரசித்திப்பட்டவனாய் இருக்கும் நாளையில் முன்னாலே சபுத்தம் கோறியிறுக்கப்பட்ட பெண்ணை குலத்துலே தன்புள்ளைக்கு கலியாணமும் செயிது கொண்டு அம்ச புருஷனாயி தெய்வ கடாட்சத்துனாலே சற்ப்பத்து ணாமதேயமான காளிங்கரென்கிற நாமதேயமும் வேளாள சாதியானபடியினாலே கவுண்டர் என்கிற நாமதேயமும் ரெண்டு நாமதேயமும் சேர்ந்து காளிங்க கவுண்டன் யென்குர பேற் பிறசுத்திப்பவறாயி தான் கட்டி வச்ச அணைக்கு காலிங்ககவுண்டன் அணையென்றும் காலிங்கக் கவுண்டன் வாக்கிய லென்றும் தான் உண்டு பண்ணின நீற்ப்பாங்கு நிலத்தில் வெளயப்பட்ட காளிங்க நெல்லுயென்று வெளயப் பண்ணி சம்மந்த பாத்தியங்களுஞ் செய்து கொண்டு யிருந்தான்.

இப்படி வாக்கியால் வெட்டி அணை கட்டி பிள்ளைக்கு கல்யாணம் பண்ணுகிற வரைக்கும் சபுதம் கோரி தீட்சை வளைத்துக் கொண்டு யிருக்கும் சமயத்தில் தெய்வ கடாட்சத்தினாலே மனோ பீஷ்டம் நெறவேறி யிருக்கும் சமயத்தில் ஒரு நாள ஆயாசத்துடனே நித்திரை பண்ணிக் கொண்டு யிருக்கிற சமயத்திலே ஒரு ணாசுவன் திட்சை மயிரை வாங்கி போட்டு நிலைக்கண்ணாடியை யெதிரே வச்சு வணக்கத்துடனே நின்னுக்கொண்டு யிருந்தான். நித்திரை தெளிஞ்சி நெலை கன்னாடி பார்த்தவுடனே ஆயுஷகாறம் மாகி யிருந்தபடியினாலே சந்தோஷம் வந்து நாசுவனை பார்த்து உணக்கு என்ன வேணுமென்று கேட்டார். அந்த ணாசுவன் யென் பேர் வெளங்கியிறுக்கும்படியாக பண்ணவேணுமென்று மனுவு கேட்டுக்

கொண்டபடியினாலே தாம் கட்டிவிச்சு அணையோடும் தாம் இறுக்கப்பட்ட காலிங்கன் பாளையத்துக்கு தென்பிறம் நாசுவன் பேறாலே ஊரு உண்டுபண்ணி னாசுவன் பாளையமென்றும் பேர் விளங்க பண்ணி அந்த னாசுவனுக்கு அந்த பாளையம் சர்வ மானியமாகக் கொடுத்தார்.

இப்படிக்கு காலியங்கறாயக் கவுண்டர் யென்கிற பேர் பிரசித்திப் பட்டவராய் வெள்ளோட்டு குடியிருப்புக் காரராயி பூந்துரை னாட்டு நாடாதிபத்தியம் தான் உண்டு பண்ணின அணை வாக்கியால் பரிபாலனம் பண்ணிக் கொண்டு புள்ளை தலை முறைக்கும் காலிங்க கவுண்டன் என்கிற நாமதேயம் உண்டானவர்களாய்யிறுந்தார்கள்.

பவானி கூடலுலே கலிங்கக் கவுண்டன்யென்கிறவன் அணைகட்டி வச்சு மேற்பிடுறத்தி பண்ணினது. கலியுக சாகாபுதம் 2000 காலிங்க கவுண்டன் கட்டியிருக்கப்பட்ட அனைஇலே மேற்படி கவுண்டனையும் சற்ப்பத்தேயும் சிலா பிறதிமை ரூபமாக கல்வெட்டி வச்சு சிலாசா சனமும் யெளுதியிருக்குரது அந்த அனை போட்டு யிறுக்கப் பட்ட இடத்தில் குடிகள் பறம்பரையாஇ வறுஷயிறுதியும் உச்சவம் பண்ணிக்கொண்டு வருகுரது வருஷப்பிரதியும் காலிங்கக் கவுண்டன் பிறிதி மைக்கி பூசை நெய்வேத்தியம் பண்ணிக் கொண்டு வந்தால் வெள்ளம் வந்து வெள்ளாண்மை வெளைஞ்சுக்கொண்டு வருகிறது. இப்படி ஈஸ்வரர் அனுக்கிற ஹத்துநாலே மூர்த்திகரம் உண்டாயிருக்கிறது. இஸ்வறா அனுக்கிரஹத்துனாலே காலிங்க கவுண்டன் யென்ங்குர அம்சைபுறுஷன் வம்ச பரம்பரையிலே காலிங்க கவுண்டர் யென்று பேர் வச்சுக்கொண்டு வருகிறது.

இப்படி காலிங்கக்கவுண்டர் என்கிற பேர் பிரசித்திப்பட்டவர்களாய் பலாட்டியனாய் வெள்ளோட்டு பூந்துரை னாடாதிபத்தியம் ஆண்டு கொண்டு வரும் நாளையிலே கொங்கு இருவத்தினாலு நாட்டுக்கும் பட்டக்காற்களாகியிறுக்கப் பட்டவற்கள் சரியிருப்பும் சரிமறியாதிகளும் குடுக்கப்படாது யென்று

சொன்னதுனாலேயும் பூர்வத்தில் சேரமாம் பெறுமாள் சா(த்)தந்த
கோத்திரகாற்களுக்கு கார் விடிக்கை நாடு பிறவும் பண்ணி கொடுத்து
யிருக்கிற படியினாலேயும் நாட்டு, பட்டக்காரர்கள் சரிமரியாதி நடக்க
மாட்டாதென்று சொல்லி கொண்ட படியினாலே வெள்ளோடு விட்டு
மணவெருப்புனாலே ஆனைமலை சரிவிலே தங்கள்
காணியாட்சியான காவிடிக்கநாடு காடு கொண்டு வனமாயிருந்ததில்
தங்கள் பசுமாடுகளை விட்டுயிருந்து மாடுகளை சம்ரட்சணை
பண்ணுகுரதுக்காக தங்கள் சனங்கள் இருந்த படியினாலே காவிடிக்க
நாட்டு வனத்துக்கு வந்து மாடுகளையும் பாத்து மா(ட்)டுகளுக்கு
சம்ரட்சணைக்காக பட்டிகளும் போடுவிச்சு அஞ்சாறு காளைகளும்
கட்டிவிச்சு கொங்குயிருவத்திநாலு நாட்டுக்கும்
பாளையப்பட்டுகளுக்கும் இவற்களுக்கெல்லாம் அதிகமறியாதெகள்
உண்டு பண்ணிக்கொள்ள வேணுமென்று நினைச்சு
றாயசமுஸ்தானத்துக்கப் போனார்.

றாய சமுஸ்தானத்தில் காத்துக்கொண்டயிருக்கும் நாளையில் பனிரெண்டு வருஷம் வரைக்கும் றாயரவர்கள் பேட்டியில்லாமல் கய்யிலே கொண்டு போன திரவியங்கெளல்லாம் செலவழிந்து போய் கஷ்டப்பட்டுக் கொண்டு அதிவெஸனத்தை அடைஞ்சவனாய் பெனுக்கொண்டை பட்டணத்துக்கு வெளியிலே தென்புறம் காளி கோவிலிலே போய் கெத்திரமாக படுத்துக்கொண்டு யிருந்தார்.

